காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்)
திருப்பல்லவனீச்சுரம்
அருள்மிகு பல்லவனநாதர்
அருள்மிகு பட்டினத்தார்
கோயில்
குடமுழுக்கு விழா மலர்



காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) திருப்பல்லவனீச்சரம்
அருள்மிகு சௌந்தரநாயகி அம்பாள் உடனுறை
பல்லவனநாதர் பட்டினத்தார் திருக்கோயில்

குடமுழுக்கு விழா மலர்

பதிப்பாசிரியர்
தமிழவேள் ச. மெய்யப்பன்

பவ ஆண்டு பங்குனி மாதம்
22 ஆம் நாள் (5–4–95) புதன் கிழமை

மலரின் தனிச் சிறப்பு

30-1

மலர்க்குழுத் தலைவர்
தமிழவேள் ச. மெய்யப்பன்

தொல்பழங்காலந் தொட்டு காவிரிப்பூம்பட்டினம், மதுரை முதலிய பெருநகரங்கள் தமிழகத்தில் பெருமையுடன் திகழ்ந்தவை. மதுரை மூதூர், புகார் மூதூர் என்னும் வழக்கு இதன் பழமையினைப் பேசும். காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் விளங்கும் துறைமுகநகர். இன்று சென்னையில் நூற்றுக்கு மேற்பட்ட கப்பல்கள் நாளும் பெருகி இருப்பதுபோல் அன்று பூம்புகார்த் துறைமுகம் பொலிவுடன் விளங்கிற்று. பூம்புகார் பழமைச் சிறப்போடு பண்பாட்டுச் சிறப்புடையது. நகர நாகரிகத்தில் முதன்மைபெறும் பெருநகராகவும் பிறங்கிற்று. சங்க இலக்கியம் பூம்புகாரின் பல்வகைச் சிறப்புகளைப் பாங்குடன் பேசுகின்றது. சிலப்பதிகாரம் பூம்புகாரின் சீர்த்தியைச் செப்பேடாக்குகிறது. தமிழ் நாகரிகத்தின் தொட்டிலாக காவிரிக் கரை விளங்கியிருக்கிறது. பூம்புகார் தமிழ்ப் பண்பாட்டுப் பண்ணையாய்த் தழைத் தோங்கியுள்ளது.

மன்னர் பின்னோராகிய நகரத் தார்கள் நலமுடன் வாழ்ந்த தொன்மைப்பதி பூம்புகார். பழந்தமிழர் நாகரிகத்தில் அழிந்தவை போக எஞ்சியவை அனைத்தும் நகரத்தார் வாழ்வில் இன்றும் காணலாம். கட்டடக்கலை, விருந்தோம்பல், கடற்பயணம், வணிகம் முதலிய பண்பாட்டுச் சுவடுகள், நாட்டுக்கோட்டை நகரத்தாரிடம் இன்றும் நனிசிறந்து விளங்குகின்றன. இத்தகு பெருமைமிகு பதியில் ஞானச் செல்வர் பட்டினத்தார் நகரத்தார் குலத்தில் தோன்றித் தமிழர் தத்துவ இயலுக்குப் பெருமை சேர்த்தவர். தூய துறவின் பன்முக நலங்களைப் பட்டினத்தார் போல் எடுத்துரைத்தவர் யாருமிலர். பாரில் பட்டினத்தார் போல் துறவு வாழ்வு வாழ்ந்தவரும் எவருமிலர்.

பல்வேறு காரணங்களால் பூம்புகார் பதி நீங்கித் தென்தமிழ் நாட்டுக்குச் சென்ற நகரத்தார்கள் செட்டிநாடு என்றொரு பகுதியில் 76 ஊர்களில் ஏற்றமுடன் வாழ்கிறார்கள்; தம் குலமுன்னோராகிய தவஞானச் செல்வர் பட்டினத்தாருக்கு ஆண்டு தோறும் விழா எடுத்து அகமகிழ்வு கொள்கின்றார்கள். 76 ஊர் ஆச்சிமார்களும், செட்டியார்களும் வீட்டை மறந்து பூம்புகாரில் கூடி 10 நாட்கள் இறையுணர்வு பொங்க விழா எடுத்துத் தம்மை மறந்து இன்புறுகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி. நல்லுணர்வோடு வாழும் வாழ்வு வர்ணிக்க முடியாத சிறப்பினை உடையது. பட்டினத்தார் வரலாறு கதையாய் நாடகமாய், இசைப்பேருரையாய், கதாகாலட்சேபமாய், திருவிழாவில் சீரோடும் சிறப்போடும் எடுத்துரைக்கப் படுகிறது. செட்டியார்கள், ஆச்சிகள் கூடி வாழ்வதும் திருமணங்கள் பேசி முடிப்பதும் கொள்வினை, கொடுப்பினை உறுதி செய்வதும் நாளும் நடக்கும் நல்ல செயல்களாகும். ஆச்சிமார்களின் அளவிறந்த ஈடுபாடும் விழாவுக்குத் தனி அழகு. பட்டினத்தார் கதை சொல்லும் காரைக்குடி PL.TL. அருணாசலம் செட்டியார் ராஜாங்கம் நடத்துகிறார். ஆடல், பாடல் ஆட்டபாட்டம், தாலாட்டு, தவிப்பு, மகிழ்ச்சி ஒன்பான் சுவையும் ஒருங்கே பொங்க உவமை சொல்ல இயலாத விழா பட்டினத்தார் விழா. ஆச்சிகள் பானை, சட்டி வாங்குவதோடு பக்கத்திலுள்ள பாடல்

பெற்ற தலங்களையும் சென்று வழிபடுவர். செட்டிநாட்டுத் தமிழின் செழுமையை மனங்குளிரச் செவிகுளிர நுகர்ந்து மகிழலாம். அரை நூற்றாண்டாக அற்புதமாக விழா நடத்தும் நகரத்தார்களுக்குத் திருக்கோயில் குடமுழுக்குத் திருப்பணி எண்ணம் தோன்றியது. ஒருங்கிணைந்து செயலாற்றத் தொடங்கினர். வெற்றியும் கண்டனர். அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தினர் வலிவோடும் பொலிவோடும் இதற்கு முன் குடமுழுக்குக் கண்டவர்கள். யார் செய்வார் இத்திருப்பணியை என்ற நிலையில் நாம் செய்வோம் என்று 76 ஊர் நகரத்தார்களும் ஊற்றமுடன் உழைத்து ஏற்றமுடன் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா கண்டு பெருமிதம் கொள்கின்றனர். தேவகோட்டை ஜமீன்தார் திருப்பணிச் செல்வர் சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் ஊற்றுக் கண்ணாய் அமைந்தார்கள். இணைவேந்தர் M.A.M இராமசாமி, தொழிலதிபர் A.C. முத்தையா, சிவகாமி நூற்பாலை அதிபர் கருமுத்து சொக்கலிங்கம் முதலியோர் பெருந்தொகை வழங்கிப் பெருவிழாவைச் சிறப்பாகச் செய்யத் துணைநின்றனர். தொகை சிறியதோ பெரியதோ நகரத்தார் பலர் மனமுவந்து தந்த தொகை சிறு துளி பெருவெள்ளமாய்ப் பெருநிதியமாகக்குவிந்து குடமுழுக்கு விழா கோலாகலமாக நடைபெற்றது. யார் செய்கிறார் என்பது தெரியாமலே திருப்பணி வேலைகள் திட்டமிட்ட காலத்தில் திட்ட மிட்டபடி முடிந்து குறித்தநாளில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது.

குடமுழுக்கு விழாக் காலத்தில் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், நடன நாடக நிகழ்ச்சி தமிழ்ச்சுவை பொங்கத் தழைத்தினிது ஓங்கின. பிரிக்கப்படாத தஞ்சை மாவட்ட வட்டித் தொழில் வணிகர்கள் (லேவாதேவிக் காரர்கள்) பெருமுயற்சியில் மூன்று நாட்களும் 11 வேளைகளும் பெருந்தொகை யளித்து நகரவிருந்து படைத்தனர். திருமுறைகள் முழங்க வேத கோஷங்கள் ஒலிக்க மங்கல வாத்தியங்கள் இசைக்க 5-4-95 புதன் கிழமையன்று வானவரும் தேவரும் விண்ணவரும் மண்ணவரும் ஊரார், நாட்டார், நகரத்தார் கண்டுகளிக்கக் குடமுழுக்கு விழா நடைபெற்றது. நகரத்தார் எடுக்கும் குடமுழுக்கு என்றால் மலர் மலர்வது இயல்பு. இம்மலர் உள்ளடக்கத்தால் சிறந்தது. அளவால் சிறியது. கருத்துக்களால் கனமுடையது. படிக்க, சுவைக்க, பேணிக்காக்க, ஏற்றது. சிந்தனையாளர்களின் கருத்து நலம் மிக்க கட்டுரைகள் மலருக்கு வளம் சேர்க்கின்றன. பூம்புகார் வளம், புதிய செய்தி, சிவஞானபோதம், பட்டினத்தார் பாடல்கள், திருவெண்காட்டுச் சிற்பங்கள், நகரத்தார் நல்லியல்புகள், இதற்குமுன் நடைபெற்ற குடமுழுக்கு விழா அழைப்புகள், செட்டிநாடு ஊர்ப் பெயர்கள், பின்கோடு, நகரத்தார் பெருமக்கள் பட்டியல் என பல்வேறுச் செய்திகள் இம்மலரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நகரத்தார் குருபீடங்களின் ஆதீனத்தலைவர்கள் வந்திருந்து காட்சி நல்கி அருளாசி வழங்கியது குடமுழுக்கு விழாவில் கோபுரங்களாகவும், கோபுரக்கலசமாகவும் ஒளிவீசியது. கோவிலூர், துலாவூர், பாதரக்குடி, காளையர் கோயில் ஞானத் தலைவர்கள் எழுந்தருளி யிருந்தனர். குடமுழுக்கு விழா சிறக்க எல்லா ஊர் நகரத்தார்களும் பாடுபட்டாலும் கண்டனூர் நகரத்தார் பங்களிப்பு சிறப்பு பெறுகிறது. விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும் சேகரித்து உதவிய செம்மல்களுக்கும் மலர் சிறக்க பல்லாற்றானும் உழைத்த பலருக்கும் விழா சிறக்கப் உதவிய குழு உறுப்பினர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக மூலவிசையாக அமைந்த இளவல் கண்டனூர் நா. அழகப்பன் அவர்களுக்கும் மலர்க்குழு, மலர்ப் பதிப்பாசிரியர் நெஞ்சம் நெகிழ்ந்த அன்புகலந்த வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்து மகிழ்கிறது.



திருப்பணிக் குழுத் தலைவர் :
அழ.அரு.சோம. நாராயணன் செட்டியார்,
தேவகோட்டை



திருப்பணிக் குழுத் துணைத்தலைவர் :
நா.அரு.கா. அருணாசலம் செட்டியார்,
கண்டனூர்



திருப்பணிக்குழு பொருளாளர் :
பவ.பழ.ராம. அழகப்ப செட்டியார், இராயவரம்



திருப்பணிக்குழுச் செயலாளர் :
நா.அரு.கா.நா. அழகப்ப செட்டியார், கண்டனூர்



காரைக்குடி
திரு. PL.TL. அருணாசலம் செட்டியார்



மலர்க்குழுத் தலைவர்
டாக்டர் ச. மெய்யப்பன்

மலர்க்குழுத் தலைவர் டாக்டர் ச. மெய்யப்பன்

குழு உறுப்பினர்கள்

30-1

கோயமுத்தூர்	ப.வ. பழ.ராம. வயிரவன் செட்டியார்
	கவிஞர் செல்லகணபதி
	AL.S. அழகப்பன்
	எல்.சோமு (நச்சாந்துபட்டி)
	ராம. ஏகப்பன்
	சபா. சிங்காரம்
	ஒலவக்கோடு சுப. (கோனாபட்டு)
திருப்பூர்	மீ. தியாகராஜன், (தேவகோட்டை)
	சே. பழனியப்பன் (வேந்தன்பட்டி)
சேலம்	ST. அண்ணாமலை (ஆடிட்டர்)
	பி.ஆர். அழகப்பன்
	ராமனாதன் (ஸ்டேட் ஐஸ்)
	அப்பு.லெ. சுப்பையா
ஈரோடு	நா.சி.சொ. (அபிராமி தியேட்டர்) செந்தில் நாதன்
	மு.வ.மு. முத்தையா
திருச்சி	A.V.K. ஆவிச்சி செட்டியார்
	அருணாசலம் (உண்ணா மூவீஸ்)
	ஸ்டார் அருணாசலம்
	நாகப்பா கார்ப்பரேஷன் லெட்சுமணன்
மதுரை	VN.CT. சிதம்பரம்
	அழ.மு.கரு. முத்துராமன்
	பழம் நீ முத்துமாணிக்கம்
	நா. இளங்கோவன்
	எல். சுந்தரம்
	வேந்தன்பட்டி குமரப்பன் (தாலாட்டுக் கவிஞர்)
	எம். கண்ணப்பன்
	விஜயா பிரிண்டிங் சொக்கலிங்கம்
காரைக்குடி	AL. திருநாவுக்கரசு
	அரு. சோமசுந்தரம்
	சத்யா ஸ்டீல் பழனியப்பன்
	லயன் கண்ணப்பன்
	SV.RM. ஆவுடையப்பன்
சென்னை	ஆர்.எம்.சுப்பு (பழனியப்பா பிரதர்ஸ்)
	வள்ளுவர் பண்ணை பழனியப்பன் (கொப்பனாபட்டி)
	திருமணச் சேவை பழனியப்பன்
	KM.CT. நாராயணன்
	பள்ளத்தூர் தேனப்பன்
விழுப்புரம்	நா. லெட்சுமணன் (தலைவர், நகரத்தார் சங்கம்)
	ஆறுமுகம் (மணிமார்க் கலப்பை விழுப்புரம்).
பொள்ளாச்சி	RM. வெள்ளையப்பன்

ஸ்ரீ பட்டினத்தடிகள் திருக்கோயில் திருப்பணிக் குழு

தலைவர் : அழ.அரு.சோம. நாராயணன் செட்டியார்
தேவகோட்டை

துணைத்தலைவர் : நா.அரு.கா. அருணாசலம் செட்டியார், கண்டனூர்
நாக.ராம. ராமசாமி செட்டியார், புதுப்பட்டி

பொருளாளர் : ப.வ.பழ.ராம. அழகப்ப செட்டியார், ராயவரம்

செயலாளர் : கா.நா. அழகப்ப செட்டியார், கண்டனூர்

உறுப்பினர்கள்:

1. இராம. சிதம்பரம் செட்டியார், மயிலாடுதுறை
2. ப.வ.பழ.ராம. வயிரவன் செட்டியார், இராயவரம்
3. AL.S. அழகப்ப செட்டியார், கண்டவராயன்பட்டி
4. சு.கரு. பழனியப்ப செட்டியார், சொக்கலிங்கம்புதூர்
5. ந. லெட்சுமணன் செட்டியார், நாட்டரசன்கோட்டை
6. பழ.பழ. சொக்கலிங்கம் செட்டியார், குத்தாலம்
7. பழ.தெ.லெ. அருணாசலம் செட்டியார், காரைக்குடி
8. S. பழனிமலை செட்டியார், கண்டனூர்
9. SV.RM. ஆவுடையப்ப செட்டியார், கண்டனூர்
10. க.அப.அ. பழனியப்பச் செட்டியார், செக்காலை
11. அழ.மு.கரு. முத்துராமன் செட்டியார், வேந்தன்பட்டி
12. காசி ஸ்ரீ ராம சுப்பையா செட்டியார், தேனிபட்டி
13. சோம.கரு. சோம சுந்தரம் செட்டியார், அமராவதிபுதூர்
14. இராம. சிதம்பரம் செட்டியார், கொ. லெட்சுமிபுரம்
15. VE ST வயிரவன் செட்டியார், இராயவரம்
16. இராம. வயிரவன் செட்டியார், கண்டனூர்
17. செ.லெ. முத்து செல்லப்ப செட்டியார், அரிமழம்
18. சோம. செல்ல கணபதி செட்டியார், கண்டனூர்
19. SM.ST.SM சிதம்பரம் செட்டியார், தாணிச்சாவூரணி
20. TM.RM ராமநாதன் செட்டியார், குளிபிறை
21. அழ. கருப்பையா செட்டியார், மன்னார்குடி
22. அன்பு. நா. சிதம்பரம் செட்டியார், கண்டனூர்
23. பெரி.யெ.மா. சுப்ரமணியன் செட்டியார், தேவகோட்டை
24. TR. ராமநாதன் செட்டியார், சிறுகூடல்பட்டி
25. SP. நாகப்ப செட்டியார், காரைக்குடி
26. PL. நாச்சியப்ப செட்டியார், காரைக்குடி
27. ஆறு.சுப. ஆறுமுகம் செட்டியார், மேலைசிவபுரி

உறுப்பினர்கள் தொடர்ச்சி :

28. Dr. ச. மெய்யப்ப செட்டியார், கடியாபட்டி
29. PR. அருணாசலம் செட்டியார், கண்டனூர்
30. நா. ராமசாமி செட்டியார், செம்பனூர்
31. வே. வேலாயுதம் செட்டியார், பாகனேரி
32. அ.நா.சுப. நாகப்ப செட்டியார், கோனாபட்டு
33. SP. நாச்சியப்ப செட்டியார், செம்பனூர்
34. சோ. சொக்கலிங்கம் செட்டியார், பள்ளத்தூர்
35. சுப்பையா செட்டியார், தலைவர் நகரத்தார் சங்கம், மயிலாடுதுறை
36. காசி செட்டியார், செயலர், நகரத்தார் சங்கம், கும்பகோணம்
37. கண்ணன் செட்டியார், நாகப்பா சைக்கிள் மார்ட் உரிமையாளர், கும்பகோணம்
38. ST.AR. அருணாசலம் செட்டியார், கண்டனூர்
39. AR. லெட்சுமணன் செட்டியார், தேவகோட்டை
40. கும.கரு.ராம. சொக்கலிங்கம் செட்டியார், மன்னார்குடி
41. பெரி. அழகப்ப செட்டியார், கண்டனூர்
42. S.S. அருணாசலம் செட்டியார், கண்டனூர்
43. சி.ரா. சொக்கையா செட்டியார், கண்டனூர்
44. AR. அழகப்ப செட்டியார், கண்டனூர்

ஸ்ரீ பட்டினத்தார் திருக்கோயில்
திருப்பணி உபயதாரர்கள் விவரம்

கன்னி மூல விநாயகர்	-	நா.அரு.கா. குடும்பத்தார், கண்டனூர்
ராஜகோபுரம்	-	கருமுத்து தி.சு. சொக்கலிங்கம் செட்டியார்
சுப்பிரமணியர்	-	மெ.க. மெய்யப்ப செட்டியார்குடும்பத்தார், ஓ.சிறுவயல்
சுவாமி	-	ப.வ. குடும்பத்தார், இராயவரம்
அம்பாள்	-	அன்பு நா. சிதம்பரம் செட்டியார்,கண்டனூர்
நடராஜர்	-	இரசிகமணி க. ப. இராம. சிதம்பரம் செட்டியார், கொ. லெட்சுமிபுரம்
பள்ளியறை	-	முரு. சிவகாமி ஆச்சி, கண்டரமாணிக்கம்
பட்டினத்தார்	-	சேவு.லெ.நா.ராம. புதல்வர்கள், தேவகோட்டை
கஜலெட்சுமி	-	செ.லெ. முத்துச் செல்லப்ப செட்டியார், அரிமளம்
சண்டிகேஸ்வரர்	-	சித. வயிரவன், தாணிச்சா ஊரணி
திருக்குள விநாயகர்	-	ராம.பழ. மாணிக்கம் செட்டியார், காரைக்குடி
கோவில் நுழைவு வாயில்	-	காசிஸ்ரீ ராம. சுப்பையா செட்டியார், தேனிபட்டி

காவிரிப்பூம்பட்டினத்துப்

பல்லவனீச்சர

ஸ்ரீசௌந்தரநாயகியம்பாசமேத ஸ்ரீபல்லவனநாதசுவாமி

மஹாகும்பாபிஷேக பத்திரிகை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்.

பண் தக்கேசி.

தாரார் கொன்றை பொன்ற யங்கச் சாத்திய மார்பகலம்
நீரார் நீறுசாந்தம் வைத்த நின் மலன் மன்னு மிடம்
போரார் வேற்கண் மாதர் மைந்தர் புக்கிசை பாடலினாற்
பாரார் கின்ற பட்டினத்துப் பல்லவ னீச்ச ரமே.

பரசுபாணியர் பாடல்வினையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்றாரிவர் தன்மை யறிவாரார்.

சுத்த சாட்குண்ணிய பரிபூரண பதியாகிய சிவபிரான் ஆன்மாக்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை யளித்தற்பொருட்டு அகரமுதலிய வொலியைக் கட்புலனாக வறிதற்கறிகுறியாக வரிவடிவில் எழுதிவைத்தாற் போலத் தம்முண்மையை ஞாபகஞ் செய்வித்தற்பொருட்டு இலிங்கருபமாய் எழுந்தருளியிருக்குந் தானங்களுள் முக்கியஸ்தானமாயும், திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரால் "சிவபிரான் இத்தானத்தையே முக்கியத் தானமாகக் கொண்டருளினர்" என்பதனைக் குறிப்பித்தற்குத் தேவாரத் திருப்பதிகத்து யாண்டும், பிரிநிலை யேகாரங்கொடுத்து "வித்தகர் மேயவிடம் பல்லவ னீச்சரமே", "கண்ணுத லண்ணுமிடம் பல்லவனீச்சரமே", "கள்வனிருந்தவிடம் பல்லவனீச்சரமே", எனக்கூறி, அவ்வளவின் அமையாது, அடுத்த திருப்பதிகத்து யாண்டும் "பல்ல னீச்சரத் தரசுபேணி நின்றார்" எனவும், "பல்லவனீச்சரத் திட்டமாயிருப்பார்" எனவும் "கிளந்தெடுத்துரைத்தருளப் பெற்றதாயும், தன்னையடைந்தார்க்குத் தருமார்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்த நான்கையும் தானே தரவல்ல தாகலின், அன்னோர் பிறதலங்கட் கவற்றின் பொருட்டுப் புகாமைக்காரணத்தாற் பெற்ற புகார் என்னுந் திருநாமத்தை யுடையதாயும், காவேரிநதி சமுத்திரத்தோடு கலத்தலிற் "காவேரிசங்கமம்" எனப் பெயரிய விசேட தீர்த்தமும் கங்கை என்னுந் திவ்விய தீர்த்தமும் பொருந்தியதாயும், அறுபத்து மூன்று நாயன்மார்களிலொருவராகிய வைசியகுலத்து உதித்த, இல்லையே யென்னாத இயற்பகை நாயனாரும் வைசிய குல சிரேட்டரான பட்டினத்துச் சுவாமிகளும் அவதரித்தருளிய தலமாயும், இப்போது தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் என்று பெயர் விளங்குகின்ற நாட்டுக்கோட்டைத் தனவைசியர்களெல்லாம் முன்பு ஒருங்கேவசித்த நகரமாகியும், திருவெண்காடு சாயாவனம், திருக்காட்டுப்பள்ளி முதலிய சிவக்ஷேத்திரங்களாற் சூழப்பெற்றதாயும், விளங்குங் காவிரிப்பூம்பட்டினத்தில் நூதனமாகக் கருங்கற்றிருப்பணி நிறைவேறினது.

ஆதலால் நிகழும் சார்வரி வருடம் வைசாசிமீ 8 -ஆம் நாள் பாநுவாரம் சஷ்டி திதி திருவோண நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 15-க்குமேல் 17 1/2 -க்குள் சிம்மலக்கினத்தில் ஸ்ரீ பல்லவனநாதசுவாமிக்கும், சௌந்தரநாயகியம்மையார்க்கும் நடத்தப்படும் மஹாகும்பாபிஷேகத்தையும் அன்றிரவு நடத்தப்படும் ரிஷபவாகன மஹோற்சவத்தையும் சிவபத்தர்களனைவரும் வந்து தரிசித்து இம்மை மறுமை வீட்டின்பங்களைப் பெறுமாறு பிராத்திக்கின்றேன்.

அநுஞ்ஞை யாதி ஆரம்பதின விவரணம்

சார்வரிவருடம்	வைகாசிமீ	1	பாநுவாரம்	அநுஞ்ஞை விக்கினேசுரபூசை
சார்வரிவருடம்	வைகாசிமீ	5	குருவாரம்	கடஸ்தாபன மகாயாசபூசை
சார்வரிவருடம்	வைகாசிமீ	8	பாநுவாரம்	மஹாகும்பாபிஷேகம்.

சார்வரிவருடம்
சித்திரைமீ 5
அமராவதிபுதூர் }

இங்ஙனம்
வயி.நாக.ராம. முத்தையாசெட்டி
20 – 5 – 1900

நாகை மாவட்டம் சீர்காழி வட்டம்
காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) திருப்பல்லவனீச்சரம்
அருள்மிகு சௌந்தரநாயகி அம்பாள் உடனுறை
அருள்மிகு பல்லவனநாதர் அருள்மிகு பட்டினத்தார் மற்றும் பரிவாரங்கள் ராஜகோபுரம்

அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக பத்திரிகை

நகரத்தார் இனத்தில் பிறந்து நமது இனத்திற்குப் பெரும் சிறப்பளித்த முற்றும் துறந்த ஞானி திருவெண்காடர் என்கிற அருள்மிகு பட்டினத்து சுவாமிகளும் இயற்பகை நாயனாரும் அவதரித்த நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் பூர்வீக ஊரான காவிரிப்பூம்பட்டினத்தில் பல்லவனீச்சரம் அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை பல்லவனநாதர், அருள்மிகு பட்டினத்தடிகள் மற்றும் பரிவார திருக்கோயில்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் புதுப்பிக்கப்பெற்று நாளது பவ ஆண்டு பங்குனி மாதம் 22-ம் தேதி (5-4-95) புதன்கிழமை ரோகிணி நட்சத்திரம் கூடிய மங்களகரமான சுபயோக சுபதினத்தில் காலை மணி 10-12க்கு மேல் 11-12க்குள் மிதுன லக்னத்தில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் திருவருள் துணைகொண்டு நடைபெறவுள்ளது. மெய்யன்பர்கள் அனைவரும் அன்புடன் வருகை தந்து கும்பாபிஷேகத்தைக் கண்டுகளித்து அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை அருள்மிகு பல்லவனநாதர் அருள்மிகு பட்டினத்தடிகள் திருவருளைப்பெற்று உய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

தமிழ் பவ ஆண்டு பங்குனி மாதம்	ஆங்கிலம் 1995 மார்ச் ஏப்ரல்	கிழமை	நேரம்	நிகழ்ச்சி விபரம்
16-ம் தேதி	30-03-95	வியாழன்	காலை 9 மணி	அனுக்ஞை, தனபூஜை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம்
17-ம் தேதி	31-03-95	வெள்ளி	காலை 9 மணி	நவக்கிரக பூஜை, ஹோமம், கிராமதேவதை வழிபாடு.
18-ம் தேதி	01-04-95	சனி	மாலை 6 மணி	வாஸ்து சாந்தி
19-ம் தேதி	02-04-95	ஞாயிறு	மாலை 3 மணி	மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம், கலாகர்ஷணம், யாகசாலாப் பிரவேசம், முதற்கால யாகபூஜை, பூர்ணாகுதி தீபாராதனைகள்.
20-ம் தேதி	03-04-95	திங்கள்	காலை 9 மணி	இரண்டாம் கால யாகபூஜை
			பகல் 12 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
			மாலை 6 மணி	மூன்றாம் காலயாகபூஜை
			இரவு 9 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
21-ம் தேதி	04-04-95	செவ்வாய்	காலை 9 மணி	நான்காம் கால யாகபூஜை
			பகல் 12 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
			மாலை 6 மணி	ஐந்தாம் காலயாகபூஜை
			இரவு 9 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
22-ம் தேதி	05-04-95	புதன்	காலை 6 மணி	ஆறாம்கால யாகபூஜை
			காலை 9.30 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
			காலை 10.12-க்கு மேல் 11.12 மணிக்குள்	மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேகம்
			மாலை	மகா அபிஷேகம்
			இரவு	பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா வருதல்

குறிப்பு : விழாநாட்களில் வேதபாராயணம், திருமுறை பாராயணம், கலை இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கே. அருணகிரி,
அறங்காவல் செயல் அலுவலர்

அறங்காவலர்கள் :

ஜி. கலிய பெருமாள் அறங்காவல் குழுத்தலைவர்
கே. செல்லத்துரை
கே. கலிய பெருமாள்
வி. ஜெயலெட்சுமி
என். ரெங்கசாமி

இங்ஙனம்
நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்,
காவிரிப்பூம்பட்டின நகரவாசிகள்.

இடம் : காவிரிப்பூம்பட்டினம்
தேதி : 3-3-1995

ச. கல்யாண சுந்தர குருக்கள், ஸ்தானிகம்
சர்வசாதகம் : திநா.சோமு குருக்கள், திருவெண்காடு
போதகம் : டி. கணேசக் குருக்கள், திருவாடானை

— சுபம் —

பிறரை அறிந்தவன் கெட்டிக்காரன்; தன்னை அறிந்தவன் ஞானி.
— வோட்ஸே

வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்து கொள்ளுகிறார்கள்; வறுமைக் காலத்தில் நண்பர்களை நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.
— இங்கர்சால்

நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது.
— நெப்போலியன்

ஒரு நல்ல நூலைப் போலச் சிறந்த நண்பனைக் காட்டிலும் நெருங்கிய உறவினர் எவருமில்லை.
— அறிஞர் அண்ணா

ஒரு நல்ல நண்பனைப் பெறுவதற்கு ஒரே வழி. நீயும் நல்ல நண்பனாக இருப்பதுதான்.
— எமர்சன்



முதல் நாள் யாகசாலை துவக்கத்திற்கு
வருகை தந்த டாக்டர் A.C. முத்தையா
செட்டியார் அவர்களும், அவரது துணைவியார்
திருமதி தேவகி ஆச்சி அவர்களும்



கும்பாபிஷேகக் கலசத்துடன் விமானத்திற்கு
புறப்படுதல்



யாக சாலை துவக்க நாளன்று கண்டனூர்
திரு. நா.அரு.கா. அருணாசலம் செட்டியார்
அவர்களும் அவரது துணைவியார்
திருமதி அழகம்மை ஆச்சி அவர்களும்



திருப்பணிக் குழுவினரில் சிலர்



உற்சவர் உலா வரும் காட்சி



பட்டினத்தார் மூலஸ்தானம்



அருள்மிகு பல்லவனநாதர் தீப ஆராதனை



திருக்குட நன்னீராட்டு

காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும்

திருவெண்காடராகிய பட்டினத்தடிகள்

அற்புதத் திருவிழாப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

பண்: பழம்பஞ்சுரம். ஈரடி

பரசு பாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்

தரசு பேணி நின்றாரிவர் தன்மையறிவாரார் – திருச்சிற்றம்பலம்

காவிரிப்பூம்பட்டினம் திருவெண்காடராகிய பட்டினத்தடிகள்

அற்புதத் திருவிழா விவரம்

1ம் திருநாள் இரவு அனுக்ஞை விக்னேசுவர பூஜை, திருவெண்காடர் திருவவதாரம் 2ம் திருநாள், காலை திருவெண்காடர் திருவெண்காட்டிற்கு எழுந்தருளல். பகல் ஞானாசிரியரோடு மணிகர்ணிகையில் சங்கற்ப ஸ்நானம் செய்து திருக்கோவிலுக்கெழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனை நடத்தி சிவதீக்ஷை பெற்றுக்கொள்ளுதல். இரவு சுவேதவனப் பெருமானோடு திருவீதி ஓலக்கம் வருதல்.

3ம் திருநாள் காலை திருவெண்காடர் முக்குள ஸ்நானம் சிவபூஜை முடித்துப் பல்லவனீச்சரத்திற்கு எழுந்தருளல். இரவு திருவெண்காடர் திருக்கல்யாணம், முத்துப்பல்லக்கில் வலம் வருதல்.

4ம் திருநாள் காலை மருதவாணர் குழந்தையாய் வெள்ளி விமானத்தில் சாயாவனம் கோவில் வில்வ மரநிழலில் எழுந்தருளல். பகல் சிவசர்மர் சுசிலையோடு வந்து குழந்தையைக் கண்டெத்தல். இரவு திருவெண்காடரும் பத்தினியும் வந்து அக்குழந்தையை வாங்குதல். பல்லவனீச்சரம்போய் மேற்படி குழந்தையின் நிறைக்குப் பொன் நிறுத்துக் கொடுத்தல். வெள்ளிக்கட்டிலில் தாலாட்டல்.

5ம் திருநாள் காலை மருதவாணர் வித்தியாப்பியாசம், முத்துப்பரீக்ஷை. ரெத்தினப்பரீக்ஷை. மாலை மருதவாணர் கப்பல் யாத்திரைக்குக் கடற்கரை செல்லல். இரவு திருவெண்காடர் மருதவாணரைப் பார்க்க கடற்கரை செல்லல். மருதவாணர் ஒருபெட்டியைத் தாயிடம் கொடுத்துத் திருவுருக்கரத்தல். திருவெண்காடர் திரும்பிவந்ததும். தன் மனைவி மருதவாணர் கொடுத்ததாகக் கொடுத்த பெட்டியைத் திறந்து பார்க்க அதில் பட்டுடன் "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்னும் உபதேச மொழியும், காதற்ற ஊசியும், முறுக்கவிழ் நூலும் கண்டு சேந்தனாரை ஏவித் தம் பொருளனைத்தும் சூரையிடப் பணித்துத் துறவடைதல். சேந்தனாருக்கு விலங்கிடல்.

6ம் திருநாள், மாலை பட்டினத்தடிகள் உருத்திராக்க விமானத்தில் பிக்ஷைக்கெழுந்தருளல், இரவு தமக்கை நஞ்சு கலந்த அப்பம் அளிக்க அடிகள் அதனை அவள் வீட்டில் வீச வீடு தீப்பற்றுதல்.

7ம் திருநாள், மாலை ஞானகலாம்பிகை பரிபூரணமடைதல். இரவு முத்துச்சிவிகையில் ஞானகலாம்பிகை மயானஞ்சேர்தல். பின் அடிகள் எழுந்தருளித் தாயாரைச் சிதைநீக்கி வாழை மரத்தில் வைத்து ஞானாக்கினியால் தகித்தல். ஞானகலாம்பிகைக்கு ஸ்ரீசௌந்தரநாயகி சமேத பல்லவனீச்சரர் இடபாரூடராய் எழுந்தருளி மோக்ஷங் கொடுத்தல்.

8ம் திருநாள், காலை சுகசன்னியால் இறந்த திருவாரூர்ப் பிள்ளையைப் பிழைப்பித்தல். அடிகள் பரமேஸ்வரப் பிள்ளையார் கோவிலுக்கெழுந்தருளி சிவயோகத்தமர்தல். இரவு பல்லவனீச் சரத்துக்குக் கீழ்த்திசையில் அடிகள் கழுமரம் எரித்தல். உடனே பத்திரகிரி ராஜா அனுக்கிரஹம் பெற்றுத் துறவடைதல்.

9ம் திருநாள் மாலை சுவாமி பத்திரகிரியாரை தனதருள்வயப்படுத்தும் கிருபையால் அடியவராய்ப் பட்டினத்தடிகளிடம் வந்து தனது பசியைத் தணிக்கும்படி கேட்க, அடிகளுடைய பதிலுரைப் பிரகாரம் பத்திரகிரியாரிடம் போய் சம்சாரியென்றிரக்க, அவர் ஓட்டை எறிய ஓடு உடைந்து நாயும் இறக்க பத்திரகிரியாரும் நாயடியாளும் அடிகளருளால் மோக்ஷமடைதல். தங்கப் பேய்க்கரும்பு தாங்குதல்.

10ம் திருநாள், உத்திராடம் காலை பட்டினத்தடிகள் குருபூஜை. சேந்தனார் விலங்கு தெறித்தல். சௌந்திராநாயகி சமேத பல்லவனீச்சரருக்கு ருத்ராபிஷேகம் நடத்தல். இரவு பஞ்சமூர்த்திகளும் பட்டினத்தடிகளும் திருவீதிவருதல். அடிகள் சிவலிங்க ரூப சாயுச்சியமாதல்.

11ம் திருநாள் காலை பஞ்சமூர்த்திகளுக்கும், மருதவாணருக்கும், சிவகலை சமேத பட்டினத்தடிகளுக்கும், சுசிலை சமேத சிவசருமருக்கும் பத்திரகிரியார், நாயடியாள், ஞானகலாம்பிகை, சேந்தனார், சேந்தனார் பத்தினி, குழந்தை இவர்களுக்கும் ருத்ராபிஷேகமும், விடையாற்றியும் நடைபெறும். திருவிழாவின் போது ஒரு நல்ல நாளில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்
காவிரிப்பூம்பட்டினத்து நகரவாசிகள்.

உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக் கூடாது.
– விவேகானந்தர்

உற்சாகமாய் இருங்கள்; உலகத்தில் ஏற்கெனவே இருக்கும் உம்மணா மூஞ்சிகள் போதும்.

செயல் சிறிதோ, பெரிதோ, தம்மால் செய்யக்கூடியவற்றைச் சலிப்பின்றிச் செய்பவரே போற்றுதற்குரியவர்.

வாழ்நாள் முழுவதும் உழைத்தால்தான் ஒரு துறையில் தனிச்சிறப்பு நிலையை அடையமுடியும். அதற்குக் குறைந்த விலையில் அந்த நிலையை வாங்க முடியாது.

உழைப்பின்றி வெற்றி எதுவும் தழைப்பதில்லை. முறையான சிந்தனையால் வெற்றி கிடைக்கிறது. கண்ணுறங்காக் கவனத்தில் அது காப்பாற்றப் பெறுகிறது. **– ஜேம்ஸ் ஆலன்**

மெய்கண்டார் அருளிய

சிவஞான போதம்

பதிப்பாசிரியர்

டாக்டர் ச. மெய்யப்பன்

கடவுள் வாழ்த்து

விநாயக வணக்கம்

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே

அவையடக்கம்

நேரிசை வெண்பா

தம்மை உணர்ந்து தமையுடைய
தன்னுணர்வார்
எம்மை உடைமை
எமையிகழார் - தம்மை
உணரார் உணரார்
உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பொதுவதிகாரம்

பிரமாணவியல்

முதற் சூத்திரம்

பதி உண்மை

அவன் அவள் அதுஎனும்
அவை மூவினைமையின்
தோற்றிய திதியே
ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இரண்டாஞ் சூத்திரம்

பாச உண்மை

அவையே தானே
யாயிரு வினையிற்
போக்கு வரவு
புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

மூன்றாஞ் சூத்திரம்

பசு உண்மை

உளதில தென்றலின்
எனதுட லென்றலின்
ஐம்புலன் ஒடுக்கம்
அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின்
உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர
தனுவினுள் ஆன்மா.

இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

பசு இலக்கணம்

அந்தக் கரணம்
அவற்றினொன்றன்று அவை
சந்தித்தது ஆன்மாச்
சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்பநின்று
அஞ்சவத் தைத்தே.

ஐந்தாஞ் சூத்திரம்

பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து
மெய் வாய் கண் மூக்கு
அளந்தறிந் தறியா
ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட
பசாசத் தவையே.

ஆறாஞ் சூத்திரம்

பதி இலக்கணம்

உணருரு வசத்தெனின்
உணரா தின்மையின்
இருதிறன் அல்லது
சிவசத் தாமென
இரண்டு வகையின்
இசைக்குமன் னுலகே.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

உண்மையதிகாரம்

சாதனவியல்

ஏழாஞ் சூத்திரம்

அதிகாரியின் இயல்பு

யாவையுஞ் சூனியம்
சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது
அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது
இரண்டலா ஆன்மா.

எட்டாஞ் சூத்திரம்

சாதன இயல்பு

ஐம்புலவேடரின்
அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த்
தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின்
அரன்கழல் செலுமே.

ஒன்பதாஞ் சூத்திரம்

சாதிக்கும் முறைமை

ஊனக்கண் பாசம்
உணராப் பதியை
ஞானக் கண்ணினிற்
சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப்
பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதி விதி
எண்ணுமஞ் செழுத்தே.

பயனியல்

பத்தாஞ் சூத்திரம்

பாசநீக்கம்

அவனே தானே
ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு
வல்வினை இன்றே.

பதினொன்றாஞ் சூத்திரம்

சிவப்பேறு

காணுங் கண்ணுக்குக்
காட்டு முளம்போல்
காண உள்ளத்தைக்
கண்டு காட்டலின்
அயரா அன்பின்
அரன்கழல் செலுமே.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

ஞானிகளின் இயல்பு

செம்மலர் நோன்றாள்
சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ
அன்பரொடு மரீஇ
மாலற நேயம்
மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும்
அரனெனத் தொழுமே.

திருச்சிற்றம்பலம்

இந்நூல் கேட்டற்குரியார்

இவரென்பது

சிவமென்னும் அந்ததர
சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாம் கண்வா
சகத்தின் - சிவமுண்டாம்
ஒன்று மிரண்டு மலத்தார்க்கிங்
கொண்குருவால்
இன்றிந்நூல் மும்மை மலர்க்கு

சிறப்புப்பாயிரம்

எந்தை சனற்குமரன்
ஏத்தித் தொழவியல்பாய்
நந்தி உரைத்தருளும்
ஞானநூல் - சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான்
தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

சிவஞான மாதவன் சேவடி வாழ்க
பாராயணச் சிவஞானபோதம்
முற்றுப்பெற்றது.

பட்டினத்தார் வரலாறு

புலவர் சி. செல்வத்தாண்டவன், எம்.ஓ.எல்.
முதல்வர் (ஓய்வு)

புலவர் பாடும் புகழுடைய காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்த நகரம் காவிரிப்பூம்பட்டினம். குறையாத, அளவற்ற சிறப்பினை உடையது இப்பட்டினம் என்பதை 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' எனப் பட்டினப்பாலை பாராட்டும். காவிரிப்பூம் பட்டினத்தில் பெருநிதியம் படைத்த செல்வராக விளங்கி, நிலையாமையை உணர்ந்து அனைத்தையும் துறந்தவர் பட்டினத்தாராகிய திருவெண்காடர். இவர் மேற்கொண்ட துறவுச் சிறப்பினை, 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாருந்துறக்கை அரிது அரிது' எனத் தாயுமானவர் என்னும் மற்றொரு துறவியார் போற்றுவார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த துறவியார் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தமையால் இவரைப் பட்டினத்தார் என்று மக்கள் அழைத்தனர். இவரது காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகும். பட்டினத்தாரின் தந்தையார் சிவநேசர்; தாயார் ஞானகலாம்பிகை. உழவையும் வணிகத்தையும் தம் தொழிலாகக் கொண்ட வணிக வேளாளர் குலத்தைச் சார்ந்த சிவநேசர் தம் மனைவியோடு ஒன்றி இல்லறமாம் நல்லறம் நடத்தி, விருந்தோம்பியும் அடியார்களைப் போற்றியும் சிவ வழிபாடு செய்தும் தமக்குரிய இல்லறக் கடமைகளை முறையாகச் செய்து வாழ்ந்தார்.

இறைவன் அருளால் பெண் குழந்தையை அடைந்த பெற்றோர், ஆண்மகவு வேண்டி அருந்தவங் கிடந்தனர். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் இயல்புடைய எம்மான் அப்பெற்றோர்க்கு ஆண் மகவினை அளித்தார். பெற்றோர் அம்மகவுக்குத் திருவெண்காடர் என்னும் பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய், வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்து வளர்த்தனர்.

திருவெண்காடர் ஐந்து வயது நிரம்பியபோது சிவநேசர் சிவபதம் அடைந்தார். பின் தாயின் கருத்துப்படி கல்வி கற்று உணர்ந்து சிவநெறி போற்றினார். இவர் திருவெண்காடு சென்று இறைவனை வணங்கி நிற்கையில் ஒரு சிவனடியார் ஒரு சம்புடம் தந்து 'இதில் உள்ள சிவலிங்கத்தை வழிபாடு செய்து வருவாயாக' என்று கூறிச் சென்றார். திருவெண்காடர் நாள்தோறும் நீராடி, சிவ சின்னங்கள் தரித்துச் சம்புடத்தில் இருந்த சிவலிங்கத்தை வழிபட்டு வருவாராயினர். திருவெண்காடர் மணப்பருவம் எய்திய மையால் அன்னையார், அவ்வூரில் வாழ்ந்த சிவ சிதம்பரம் செட்டியார்க்கும் சிவகாமியம்மை யார்க்கும் மகளாய்ப் பிறந்த சிவகலையை மணம் செய்து வைத்தார். திருவெண்காடர் தாம் செய்த வணிகத்தால் பெரும் பொருள் திரட்டினார்; சிவனடியார்க்கும் உற்றார்க்கும் உறவினர்க்கும் அளித்து மகிழ்ந்தார். எனினும் பிள்ளை இல்லாக் குறை மனத்தை வாட்டியது.

திருவிடை மருதூரில் வாழ்ந்த ஆதி சைவர் ஒருவரும் அவர் மனைவியும் திருக்கோயில் சென்று வழிபாடு செய்து வருகையில், கோயில் திருக்குளக்கரையில் வில்வமரத்தடியில் ஒரு குழந்தையைக் கண்டனர். இருவரும் அதனை எடுத்துச் சென்று சிலகாலம் வளர்த்து வந்தனர். பின்னர், திருவெண்காடரிடம் அக்குழந்தையைத் தந்து பெரும் பொருள் பெற்றுச் சென்றனர். திருவெண்காடர் அக்குழந்தைக்கு 'மருதவாணன்' என்று பெயர் சூட்டிச் சிவகலையிடம் கொடுத்தார். அன்பில் மிகுதியால் சிவகலைக்குப் பால் சுரக்க, அதனை ஊட்டினார். இருவரும் மருதவாணனைக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்தனர்.

மருதவாணர் உரிய பருவத்தே கல்வி கற்றுச் சிறந்தார். வணிகக் கல்வியிலும் தலை சிறந்தவரானார். மணிகளையும் முத்துக் களையும் நுட்பமாக மதித்தறியும் அறிவில்

தலைமை உடையவரானார். பதினாறு ஆண்டு நிரம்பிய அளவில் தந்தை திருவெண்காடரின் இசைவும் ஆசியும் பெற்றுப் பிற வணிகத் தோழர்களுடன் கலமேறிச் சென்றார்.

பொருள் தேடித் திரும்பிய மருதவாணரைக் காண ஆவல் கொண்டு திருவெண்காடர் துறைமுகம் சென்றார். மருதவாணர் வீட்டிற்குச் சென்றதை அறிந்து இல்லம் மீண்டார். இதற்கிடையில் மருதவாணர் வீடு சென்று தாயைக் கண்டு வணங்கிய பின்னர் சிறுபெட்டி ஒன்று கொடுத்துத் தந்தையிடம் தருமாறு வேண்டினார். பின்னர் வெளியே சென்று விட்டார். வீடு திரும்பிய திருவெண்காடர் மகனைக் காணாது தவித்தார். அப்பொழுது அவர் மனைவி சிறிய பெட்டி ஒன்று தந்து, 'இதனைத் தங்களிடம் தருமாறு மைந்தன் கூறிச் சென்றான்' என்றார்.

பெட்டியை வாங்கித் திறந்து பார்த்த திருவெண்காடர் காதற்ற ஊசி ஒன்றும் ஓர் ஓலை நறுக்கும் இருக்கக் கண்டார். ஓலைத் துண்டை எடுத்துப் பார்த்த போது அதில், 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற உபதேச மொழி எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்து மெய்யறிவு பெற்ற திருவெண்காடர் இதுவரை மகனாக இருந்தவர் திருவிடை மருதூர்ப் பெருமானான மருதப்பரே எனத் தெளிந்தார்.

தம்மிடம் கணக்கராக இருந்த சேந்தனாரிடம், தாம் தேடிய பொருள் அனைத்தையும் ஏழை எளியவர்க்கும் சிவனடியார்களுக்கும் அளித்துவிட ஆணையிட்டார். துறவறம் மேற்கொண்டார். பசித்தபோது பிச்சை ஏற்று உண்டார். ஊர்ப் பொது மன்றத்தில் தியானத்தில் அமர்ந்தார். இவரது செயலைக் கண்டு வியந்த அவ்வூர் மன்னன் திருவெண்காடரான பட்டினத்தடிகளை அணுகி, 'தேடிய பெரும் பொருளைப் பிறர்க்குக்கொடுத்து இப்படிக் கோலம் கொண்டது ஏன்' என்று கேட்டான். அடிகளார், 'நீர் நிற்க; யாம் இருக்க' என மந்திரம்போல் சுருக்கமாகச் சொன்னார். திருவிடைமருதூர்க் கீழ்க்கோபுர வாயிலில் தங்கி, சித்தமல மகற்றிச் சிவனாகும் வண்ணம் தியானம் மேற்கொண்டிருந்தார். தம் தாயார் காலமானபொழுது வாழை மட்டையில் அவர் உடலைக் கிடத்தி ஞானத் தீக் கொண்டு எரியூட்டினார்.

அதன் பின்னர், திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட எண்ணினார். எண்ணியபடி சென்று வருகையில் திருக்கழுமலம் என்னும் சீகாழியில் உள்ள திருத்தோணியப்பர்மீது 'திருக்கழுமல மும்மணிக்கோவை' என்னும் நூலைப் பாடினார். பின் தில்லை சென்று, 'கோயில் நான்மணி மாலை' பாடினார். திருக்காஞ்சி மாநகரடைந்து, 'திருவேகம்பரந்தாதி' இயற்றினார். இறுதியாகத் திருவொற்றியூரை அடைந்த அடிகள், 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது' என்னும் நூலை இயற்றினார். அவ்வப்போது தனிப் பாடல்கள் பலவும் பாடியுள்ளார்.

இவ்வண்ணம் திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தொழுது இன்புற்ற அடிகளார், திருவொற்றியூரில் தங்கி ஒற்றீசரை வழிபட்டுத் தம் இறுதிக் காலத்தைக் கழிக்க எண்ணினார். இறைவன் பேரருளிலேயே முற்றும் வயப்பட்டுத் தன்னிழப்பு உற்று நிலவும் நாளில் தமது திருமேனி மந்திர வடிவமாகப் பெற்றார்.

ஒருநாள் ஏகாலியச் சிறுவர்களுக்கு விளையாட்டுக் காட்டுவதாகக் கூறித் தம்மை ஒரு குழியிற் புதைக்கும்படி வேண்டினார். அவர்கள் அவ்வாறு செய்தவுடன், அவர்கள் வியக்கும்படி அருகேயிருந்த குன்றின்மீது வெளிப்பட்டு நின்றார். சிறுவர்கள் வியந்து மீட்டும் இவரைப் புதைக்கவே இவர் சிவலிங்க வடிவமாக முளைத்து நின்றார். சிறுவர்கள் வாயிலாக அடிகளார் இறைவனுடன் இரண்டறக் கலந்ததை, அறிந்த அவ்வூர் மக்கள், அவ்விடம் சென்று வழிபாடு செய்தனர். தொடர்ந்து இன்றும் இவருடைய (சமாதி) பள்ளிப்படை கோயில் திருவொற்றியூரில் சிறந்த வழிபாட்டுத்தலமாக விளங்கக் காணலாம்.

சத்தாகி நின்றோர் சடங்களில் இலிங்கமென
வைத்தாரு முண்டேயென் வாழ்வே பராபரமே'–
பராபரக்கண்ணி, 244

எனத் தாயுமானப் பெருந்தகையார் கூறியது, பட்டினத்தார் அடைந்த நிலையைக் கருதியே போலும்.

திருவொற்றியூர் ஒருபா ஒருபது

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி

அணைதொறும் சிறக்கும் அமிர்தே போற்றி
இணைபிறிது இல்லா ஈச போற்றி
ஆர்வம் செய்பவர்க்கு அணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி

நஞ்சினை அமிர்தமாய் நயந்தோய் போற்றி
விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துஉறை செம்மைக்கு
ஆணி ஆகிய அரனே போற்றி

வெம்மை தன்மைஎன்று இவைகுணம் உடைமையில்
பெண்ணொடு ஆண்எனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினில் படுக்கும்
தீபம் ஆகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி

மேலோய் போற்றி வேதிய போற்றி
சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி, இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி

பொருளே போற்றி போற்றி என்றுஉனை
நாத்தழும்பு இருக்க நவிற்றின் அல்லது
எத்துதற்கு உரியோர் யார்இரு நிலத்தே.

கோயில் திரு அவகல்

ஐம்புலப் பறவை அடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை

ஆசைக் கயிற்றில் ஆடுபம் பரத்தைக்
காசில் பணத்தில் சுழலும்காற் றாடியை
மக்கள் வினையின் மயங்கும் திகிரியைக்

கடுவெளி உருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமம் காற்று எடுத்து அலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனை

நடுவன்வந்து அழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்துஎழும்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம்

இமையா நாட்டத்து இறையே அடைக்கலம்
அடியார்க்கு எளியாய் அடைக்கலம் அடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுள்நின்று ஆடிக்
கருணைமொண்டு அலையெறி கடலே அடைக்கலம்
தேவரும் முனிவரும் சென்றுநின்று ஏந்தப்

பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மான்நின் இணைஅடிக்கு அயயம்
அம்பலத்து அரசே அடைக்கலம் உனக்கே.

திரு ஏகம்ப மாலை

பிறக்கும் பொழுது கொடுவந்தது
    இல்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
    இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
    என்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
    வேன்கச்சி ஏகம்பனே.

அன்ன விசாரம் அதுவே
    விசாரம் அதுஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா
    விசாரம்நல் தோகையரைப்
பன்ன விசாரம் பலகால்
    விசாரம்இப் பாவிநெஞ்சுக்கு

என்ன விசாரம்வைத் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே.

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே.

ஊரும் சதம்அல்ல உற்றார்
சதம்அல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதம்அல்ல பெண்டிர்
சதம்அல்ல பிள்ளைகளும்
சீரும் சதம்அல்ல செல்வம்
சதம்அல்ல தேசத்திலே
யாரும் சதம்அல்ல நின்தாள்
சதம்கச்சி ஏகம்பனே.

கல்லார் சிவகதை நல்லோர்
தமக்குக் கனவிலும்மெய்
சொல்லார் பசித்தவர்க்கு அன்னம்கொ
டார்குரு சொன்னபடி
நில்லார் அறத்தை நினையார்நின்
நாமம் நினைவில்சற்றும்
இல்லார் இருந்துஎன் இறந்துஎன்
புகல்கச்சி ஏகம்பனே.

திருத்தில்லை

ஓடாமல் பாழுக்கு உழையாமல்
ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம்
விடாமல்வெம் கோபம்நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல்
இன்றைக்கு நாளைக்குஎன்று
தேடாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே.

முடிசார்ந்த மன்னரும் மற்றும்உள்
ளோரும் முடிவில்ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணா
வதுங்கண்டு பின்னும்இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்
லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டும்என்
றேஅறி வார்இல்லையே.

ஊட்டுவிப் பானும் உறங்குவிப்
பானும்இங்கு ஒன்றொடுஒன்றை
மூட்டுவிப் பானும் முயங்குவிப்
பானும் முயன்றவினை
காட்டுவிப் பானும் இருவினைப்
பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானும் ஒருவன்உண்
டேதில்லை அம்பலத்தே.

பொது

மனையாளும் மக்களும் வாழ்வும்
தனமும்தன் வாயில்மட்டே
இனமான சுற்றம் மயானமட்
டேவழிக்கு ஏதுதுணை
தினையாம் அளவுஎள் அறவுஆ
கிலும்முன்பு செய்ததவம்,
தனைஆள என்றும் பரலோகம்
சித்திக்கும் சத்தியமே.

என்செயல் ஆவது யாதுஒன்றும்
இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற்
றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங
னேவந்து மூண்டதுவே.

திருவையாறு

மண்ணும் தணல்ஆற வானும் புகைஆற
எண்ணரிய தாயும் இளைப்பாறப்-பண்ணும்அயன்
கைஆற வும்அடியேன் கால்ஆற வும்கண்பார்
ஐயா திருவையா றா.

பொது

எத்தொழிலைச் செய்தாலும் ஏதுஅவத்தைப் பட்டாலும்
முத்தர் மனம்இருக்கும் மோனத்தே-வித்தகமாய்க்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

ஐயிரண்டு திங்களா அங்கம்எலாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே பரிந்துஎடுத்துச்-செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத்-தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக் காலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்துஎடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசைஇட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு.

முன்னை இட்ட தீ முப்பு ரத்திலே
பின்னை இட்ட தீ தென்இ லங்கையில்
அன்னை இட்ட தீ அடிவ யிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே.


வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்தென்
தன்னையே ஈன்றுஎடுத்த தாய்.

திருவெண்காடு

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத்து உரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவுள்நாள் எல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம்வீற் றிருக்கும்
விழவறா வீதிவெண் காடா
அண்டரே போற்ற அம்பலத்து ஆடும்
ஐயனே உய்யுமாறு அருளே.

திருவிருத்தம்

நாப்பிளக்கப் பொய்உரைத்து நவநிதியம் தேடி
நலன்ஒன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலஎனக் கலகலஎனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகைஅறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்புஅதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துஉழல அகப்பட் டீரே.




காளையார் கோயில், துலாவூர், கோவிலூர்,
பாதரக்குடி ஆதீனங்கள் எழுந்தருளல்



குடமுழுக்கு யாகசாலை தொடக்கம்



திருப்பணிக்குழுத் தலைவர் அழ.அரு. சோம. நாராயணன் செட்டியார், துணைத்தலைவர் நா.அரு.கா. அருணாசலம் செட்டியாருக்கு பொன்னாடை அணிவித்தல்



திருப்பணிக்குழுத் துணைத்தலைவர் நா.அரு. கா. அருணாசலம் செட்டியார், தலைவர் அழ.அரு.சோம. நாராயணன் செட்டியாருக்கு பொன்னாடை அணிவித்தல்

நகரத்தார் நல்லியல்புகள்

தமிழவேள் ச. மெய்யப்பன்

இந்திய நாட்டில் தமிழ்நாடு பல்வகைச் சிறப்புகளைக் கொண்டது. தமிழ்நாட்டில் செட்டிநாடு தனித்தன்மை சான்றது. இராமநாதபுரம் மாவட்டத்தின் வடக்குப் பகுதியும், புதுக்கோட்டை மாவட்டத்தின் தெற்குப்பகுதியும் இடமாகக் கொண்ட குறுகிய நிலப்பகுதி செட்டிநாடு. சற்றொப்ப ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு மாநிலம் போலத் தனி அமைப்புடன் திகழ்கிறது. தமிழ் நாட்டில்பிற இனத்தவரெல்லாம் வெவ்வேறு இடங்களில் பிரிந்து வாழ்கிறார்கள். நகரத்தார் இனம் மட்டும் 50 மைல் சுற்றளவுக்குள் 76 ஊர்களில் இணைந்து நலமுடன் வாழ்கின்றது.

'நகரத்தார் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணம் உண்டு' என்று சொல்லும் அளவிற்கு முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த நல்ல பண்புகளை அடிப்படையாகக் கொண்டு நீண்ட நெடிய வரலாற்றுப் புகழுடன் வாழ்பவர்கள். ஒக்கூர், பூங்குன்ற நாட்டு மகிபாலன்பட்டி சங்க காலத்துப் பழந்தமிழ் ஊர்களாகும். இன்றளவும் சங்க கால மரபுகளை, வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி வரும் குலம் நகரத்தார் குலமாகும்.

திரைகடல் ஓடித் திரவியம் குவித்துத் திருப்பணிகளும், அறப்பணிகளும் செய்து வருபவர்கள். கடல் கடந்த நாடுகளிலும், அலைகடலுக்கு அப்பாலும் ஆலயங்கள், அறச்சாலைகள் நிறுவித் தமிழ்ப்பண்பைப் பரப்பிவரும் தூதுவர்களாகக் கொடையில் சிறந்த கோமான்களாகத் தமிழ் நாகரிகச் சுவடுகளைப் பதித்து வருகிறார்கள். இந்தியாவில் உள்ள எந்த இனத்தாரையும் விட நகரத்தார்கள் தனிச்சிறப்பு பெறுகிறார்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை அன்ன சத்திரங்கள், பசுமடங்கள், வேத பாடசாலைகள், நிறுவியுள்ளனர். தருமமே இவர்களது குலப்பண்பு, குடிப்பண்பு. சிக்கனமாகச் சேர்த்து, சேர்த்தவற்றை அறப்பணிகளுக்கு வாரிவழங்கும் ஒரே இனம் நகரத்தார் இனமே.

இவர்கள் இறையுணர்வு மிகுதியாக உடையவர்கள். சைவசமயத்தைத் தம் சமயமாக ஏற்றுக்கொண்டு சிவநெறி போற்றும் சீலர்கள். சிவ வழிபாட்டின ராயினும் சமயப் பொறை உடையவர்கள். சமயக் காழ்ப்பு இவர்கள் அறியாத ஒன்று.

பெருஞ்செல்வ, வளம் பெற்றிருந்தாலும் ஆரவாரமில்லாமல் அடக்கமாக வாழ்பவர்கள். வீண்புகழ்ச்சியில் மயங்க மாட்டார்கள். கோடியிருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் இயல்பான குடும்ப வாழ்க்கையைச் சிறப்பாக நடத்திவருபவர்கள். இந்தச் சமூகத்தில் தோன்றிய, கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர்கள்கூட அடக்கத்தை அணி கலனாகக் கொண்டவர்கள். எல்லா வளங்களும் பெற்றிருந்தாலும் எளிமையாக வாழ்வது இவர்கள் இயல்பு. உணவில், உடையில் நடைமுறை வாழ்க்கையில் எளிமையை எப்பொழுதும் பின்பற்று வார்கள். தினசரி வாழ்க்கையில் ஆடம்பரத்தை அறியாதவர்கள்.

சிக்கனம் என்பது இவர்களுடன் பிறந்தது. காரணமின்றி, தேவையின்றி ஒரு காசும் செலவழிக்க மாட்டார்கள். எண்ணி எண்ணிச் செலவழிப்பார்கள். அளந்துதான் செலவிடுவார்கள். 'ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு' என்பது செட்டிநாட்டு

நடைமுறையில் உள்ள பழமொழி. செட்டிநாட்டுச் சிக்கனம் என்பது கஞ்சத்தனமோ கருமித்தனமோ அல்ல. தேவைக்கேற்பச் செலவிடுவதே. ஒரு துளியும் வீணாகக்கூடாது என்பது இவர்கள் பொருளாதாரக் கொள்கை. சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கேற்பச் சிறுசேமிப்பு நகரத்தார் குருதியில் கலந்தது. சேர்வது தெரியாமலேயே சிறுசேமிப்பு சிக்கன நெறி பெருந்தொகையாய்க் குவிந்து விடுவதும் உண்டு.

உடலுக்கு ஊறு செய்யாத எளிய உணவு நகரத்தார் உணவு. இவர்களின் செய்முறை நேர்த்தியால் சாதாரணப் பொருள்கள் கூட சுவை பெற்றுவிடும். செட்டிநாட்டுக்கென்றே தனிவகைப் பலகாரங்கள் உண்டு. அவை இன்று தென்னகமெங்கும் சிறந்து இந்தியா முழுவதும் மணம் பரப்புகின்றன. வெள்ளைப் பணியாரம், பால்பணியாரம், கற்கண்டு வடை, படைப்புப் பணியாரம், கந்தரப்பம் இந்த சமூகத்திற்கு மட்டுமே அமைந்த கைவண்ணம். இவர்களது இளங் குழம்பாகிய தண்ணீர்க் குழம்பு ரசத்திலும் சுவை மிக்கது. குறைந்த செலவில் சுவை மிக்க உணவு வகைகளைச் சமைப்பது இவர்களுக்குக் கைவந்த கலை. செட்டிநாட்டுத் தின்பண்டங்கள் பெயரைச் சொன்னாலும், கேட்டாலும் நாவில் நீர் சுரக்கும். சமைத்ததைப் பரிமாறுவதும் மிக அழகாக இருக்கும். ஒரு பொருளும் சிந்தாது, சிதறாது.

திருவள்ளுவர் விருந்துக்குச் சொல்லும் சிறப்புகள் அனைத்தும் ஒருசேர நகரத்தார் விருந்தோம்பல் முறையிலே காணலாம். நோக்கக் குழையும் விருந்து என்பது வள்ளுவம். மனமகிழ்ச்சியுடன் முகமலர்ச்சியுடன் விருந்து படைத்து மகிழ்வது இவர்கள் இயல்பு. வருந்தி அழைப்பர். சிறந்த உணவு நல்குவர். சங்ககால இலக்கியம், சிலப்பதிகாரம் போற்றிப் பாராட்டும் விருந்தோம்பல் பண்பு இவர்கள் வீட்டுப்பண்பு. விருந்தில்லா உணவு மருந்து என்பர். அறுசுவை உணவு பிறர்க்களித்து மகிழ்வது நகரத்தார் எல்லோருக்கும் வழிவழியாக வரும் குலப்பண்பாகும். யாருக்கு எதுபிடிக்கும் எதை உவந்து உண்பர் என்பவற்றை உணர்ந்து உணவு படைப்பது இவர்கள் தனிச்சிறப்பு.

நகரத்தார் கணக்கெழுதும் முறை தனிச்சிறப்புடையது. வங்கிகள் அன்றைய கணக்கை (நடவடிக்கைகளை) அன்றே சீர்செய்வது போல் தினசரி திட்டம் பார்த்து இருப்புக்கட்டுதல் இவர்கள் வணிக வாழ்க்கையின் அடிப்படையாகும். தொகை சிறியதோ பெரியதோ தினசரி குறிப்பில் எழுதிவருவார்கள். வரவு செலவுத் தொகையெல்லாம் ஐந்தொகையில் கண்டு பேரேட்டில் பதிந்து லாபக்கணக்கை மனதால் எண்ணி மகிழும் இனம். ஐந்திலக்கம், பத்திலக்க எண்களையும் மனதாலே கணிப்பொறியிலும் விரைவாகக் கூட்டிக் கழித்துப் பெருக்கி, வரவு செலவை வகைப்படுத்தும் வழக்கம் இவர்களின் வரலாறு.

திட்டமிட்டுச் செலவழித்துக் கணக் கெழுதிச் சேமித்துத் தன் சமூகத்தில் எந்நிலையிலும் தன்னிலை தாழக்கூடாது என கணக்கு வழக்கைக் கண்ணும் கருத்துமாய்க் கவனிப்பார்கள். வரவு செலவு புள்ளி விவரங்கள் இவர்களுக்கு வாய்க்கணக்கு. பேனாவும், பென்சிலும் இல்லாமலே பெருந்தொகையைக் கூட்டிப் பெருக்கி விடுவார்கள். வட்டியில் உண்டு வளர்ந்து வந்த சமூகத்தினர், திட்டமிடுதலிலும் தனிச் சிறப்புடையவர்கள். திருமணமா, மணிவிழாவா, முத்துவிழாவா, பவழவிழாவா முன்கூட்டியே முறையாகத் திட்டமிட்டுச் சிறப்பாகச் செயலாற்றுவர். கணக் கெழுதுவதிலும், திட்டமிடுவதிலும் வல்லவர் களாதலால் எதனையும் சரியாகவே மதிப்பீடு செய்வர். நகரத்தார் ஒரு பொருளையோ இடத்தையோ மதிப்பீடு

செய்துவிட்டால் அதில் சிறிதுகூடக் கூடுதல் குறைதல் இருக்காது. காலதேச வர்த்தமான நிலையெல்லாம் இவர்கள் கருத்தில் பதிந்திருப்பதால் எதனையும் சரியாக மதிப்பிடும் அறிவு இவர்கள் வழிவழியாகப் பெற்ற வரமாகும்.

திருமணமான மகனை வேறுவைத்தல் என்ற முறையில் தனித்துவாழ அனுமதிப்பார்கள். சுகதுக்கங்களை எதிர்கொள்ளவும் தானே தனித்து நின்று பொருள் ஈட்டித் தன் குடும்பத்தைக் காக்கும் வல்லமையைப் பெறவும் இம்முறை வழிவகுக்கும். இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தில் மனையறம் படுத்த காதை என்பதைத் தனியாக அமைத்துள்ளார். புதுமணத் தம்பதிகள் இல்லறவாழ்வில் தனித்து நின்று நல்லறங்கள் நாளும் இயற்றித் தனது கணக்கு ஒழுங்காக்கிப் பொதுக்கணக்குச் செலவைக் குறைப்பர்.

தாம் செய்யும் தொழிலிலேயே முழுக்கவனம் செலுத்துவார்கள். பசி நோக்காது கண் தூங்காது கருமமே கண்ணாக இருப்பார்கள். பிறர் தொழிலில் செயலில் தலையிடமாட்டார்கள். பார்ப்பதற்குத் தனித்து வாழ்வது போலத் தோன்றும். அதுவே ஒருவகை வணிகச் செந்நெறி என்பதைப் பின்னர் அயல் இனத்தார் உணர்வர். விரும்பினால் பழகுவார்கள். இல்லா விட்டால் வெட்டிவிட்டுத் தம்வேலையைப் பார்ப்பார்கள். நாடார்களைப்போல் இவர்களும் தனி முன்னேற்றமே நாடுவார்கள். கூட்டுத் தொழிலில் நாட்டம் செலுத்தமாட்டார்கள்.

இந்தச் சமூகம் தலைவனுக்குரிய தலைமைப் பண்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. வாய்மை, தூய்மை, நேர்மை, இனிமை, பொதுநலம், அரவணைத்துச் செல்லுதல், விட்டுக் கொடுத்தல் முதலிய பண்புகளை உடையவர்களாதலால் அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், ஆளுநர்களாகவும், ஆட்சித் தலைவர்களாகவும் திகழ்கிறார்கள். இவர்கள் சிந்தனை ஆற்றலும் செயல்திறனும் மிக்கவர்களாதலால் தலைமை இவர்களைத் தேடிவருகிறது. அமெரிக்கா, கனடா, பிரிட்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ்ச்சங்கங்களில் தலைவர்களாய், செயலர் களாய் நகரத்தார்கள் வெற்றிக்கொடி நாட்டி வீறுடன் திகழ்கிறார்கள்.

பர்மாவின் வீழ்ச்சிக்குப்பின் காலங்கடந்து ஆங்கிலக் கல்வி கற்கத் தொடங்கினாலும் சுதந்திர இந்தியாவின் நாடாளு மன்ற உறுப்பினர்களாய், நல்ல அமைச்சர்களாய் சிகரங்களை எட்டியவர் களாகப் பலர் விளங்குகின்றனர். சிறிய சமூகத்தில் உயர்நீதிமன்றத்தின் பெருமைமிகு நீதியரசர்களாய் வீற்றிருந்து நீதிபரிபாலனம் செய்கிறார்கள். அறிவாற்றலால் ஆளுமைத் திறத்தால் நான்கைந்து துணைவேந்தர் களைப் பெற்றுக் கல்வி உலகிலும் இந்தச் சமூகம் அங்கீகாரம் பெற்று விட்டது. துணைவேந்தர்களாய் வீற்றிருந்த காலத்தில் செய்வன திருந்தச் செய்து சேமித்து நிதி ஆதாரங்களைப் பெருக்கி வரலாறு படைத்த துணைவேந்தர்கள் இவர்கள் என்று பிற சமூகத்தினர் நெஞ்சார நித்தமும் பாராட்டுகின்றனர்.

இதழியலில் இவர்கள் பங்களிப்பு மிகப் பெரியது. தனவணிகன், குமரன், ஊழியன், சக்தி, பொன்னி, சண்டேடைம்ஸ், காதல், பாப்பா, பாப்பாமலர் முதல் குமுதம் கல்கண்டு, தனித்தமிழில் 'தமிழ்நாடு' இதழ் வரை நடத்தித் தமிழ்வளர்ச்சிக்குத் தனிப்பெரும் பங்களிப்பைச் செய்தவர்கள். இந்தியப் பத்திரிகைக் குடும்பத்தில் பேரரசு நடத்தும் இந்தியன் எக்ஸ்பிரஸ் சங்கிலித் தொடரில் அறுபதாண்டு வைரவிழாக்கண்ட தேசிய இதழாம் தினமணியின் ஆசிரியராக சம்பந்தம் வீற்றிருப்பது நகரத்தாரின் இதழியல் பணிக்குக் கிடைத்த சிறந்த அங்கீகாரமாகும்.

நகரத்தாரின் தமிழ்ப்பற்று காவியப்

பெருமை உடையது. எழுத்தாளர்கள், சொற்பொழிவாளர்கள், கவிஞர்கள், நூலாசிரியர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் பட்டியல் வாழையடி வாழையென வளர்கிறது. அவற்றை விரித்தால் ஒரு காப்பியமாகிவிடும். தாய்ப்பாலோடு தமிழ்ப்பால் உண்டவர்கள். தாலாட்டில் தமிழ் கற்ற தமிழ்க் குழந்தைகள், இவர்கள் வீட்டுத் தமிழ் செந்தமிழ். பைந்தமிழோ இவர்களுக்குப் பழகுதமிழ். நாளும் திருமுறை ஓதி நாத்தழும்பு ஏறியவர்களாதலால் தமிழின் அனைத்து நலங்களையும் அறிந்தவர்கள். இவர்கள் பழந்தமிழ் மரபினர் என்பதை இவர்களின் தமிழாட்சி, சொல்லாட்சி நாளும் மெய்ப்பிக்கும். செட்டிநாட்டுத் தமிழ் சிந்தைக்கினியது. செவிக்கினியது. தூயது. தமிழ்வழிக் கல்வியின் தந்தை வ.சுப. மாணிக்கனார் தனித் தமிழ்க் கொள்கை பேராய்வுக்குரியது. கண்ணதாசனின் கவிதை வளம் இன்று ஆய்வு நூல்களால் நிறுவப்பெற்றுள்ளது. எடுத்துச் சொல்ல ஒன்றா இரண்டா ஓர் ஆயிரமாயிற்றே. தமிழகத்திலுள்ள பதிப்பகங்களில் 10க்கு ஒன்பது நகரத்தார்க்குச் சொந்தமானவை. நல்ல தமிழ் வளர்ப்பதைக் கடமையாகக் கொண்ட இந்த இனம் பதிப்புப் பணியைத் தொழிலாகக் கருதாமல் தொண்டாகக் கருதிச் செந்தமிழுக்கு நாளும் செழுமை சேர்த்து வருகிறார்கள். வணிக நோக்கு ஒன்றையே கருதாமல் வளர் தமிழுக்கு நகரத்தார் ஆற்றிய பணி அண்ணாமலை அரசரின், அழகப்பரின், கருமுத்து தியாகராசரின் தமிழ்க்கொடை தொடங்கி இன்றளவும் வானம் தொட வளர்ந்து வருகிறது. இந்தச் சமூகத்தின் உயிர்க்குணங்கள், பண்புநலங்கள், செயல் திறங்கள் பல்வகையின, பலதிறத்தன. அறிவும், ஆற்றலும் அறிவார்ந்த சாதனைகளும் தொடர்ந்து வரும் குணமாண்புகளும் ஒரு பேராய்வுக்கு உரியன. பிறநாட்டினர் போற்றும் தனி மாண்புடையன.

அகஒழுங்கும் புறஒழுங்கும் ஆன்ற கல்வியும் சான்றாண்மையும் தலைமைப் பண்பும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இந்தச் சமூகம் இந்தியப் பொருளாரத்திற்கும் தமிழக நிதி ஆதாரத்திற்கும் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. இச்சமூகத்தின் சமூகப் பங்களிப்பு இந்தியாவிலுள்ள எந்தச் சமூகத்தினரையும் விட ஒருபடி கூடுதலானது. ஒரு முழம் உயர்ந்தது. இது உண்மை. வெறும் புகழ்ச்சியன்று.

ஒவ்வொருவரும் தம் நெற்றி வியர்வை சிந்தி உழைத்துப் பிழைத்தால் மண்ணுலகம் விண்ணுலகமாகிவிடும்.
— மகாத்மா காந்தி

மக்களுக்குத் தேவைப்படுவது திறமையல்ல. குறிக்கோள், ஆற்றல் அல்ல. உழைக்கும் உறுதி. — புல்லர் — லிட்டன்

சும்மாயிருந்து துருப்பிடித்து அழிவதைவிட உழைத்துத் தேய்ந்து அழிவது சிறந்தது. — ரிச்சர்டு கம்பர்லேண்ட்

உழைக்காமல் ஒய்வை எட்ட இயலாது; போராடாமல் வெற்றியை எட்ட இயலாது. — தாமஸ் ஏ. கெம்பிஸ்

இன்று அதிகமான மலர்கள் நமக்கு வேண்டுமானால் இன்னும் அதிகச் செடிகளை நட வேண்டும். — ஜார்ஜ் எலியட்



செட்டிநாட்டு திருமடங்களின் ஆதின
கர்த்தர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும்



சிறப்பு விருந்தினர்

மீனாட்சி மைந்தன் V.N.CT. சிதம்பரம் மாவட்ட
நீதிபதி

கருமுத்து தி.சு. சொக்கலிங்கம் செட்டியார்
நீதியரசர் மாண்பமை அரு. லெட்சுமணன்.



குடமுழுக்கு விழாக் குழுவினரில் சிலர்



நகர விருந்து - பழைய தஞ்சை மாவட்ட நகரத்தார்கள்.

பூம்புகார் ஸ்ரீ பல்லவனீஸ்வரசுவாமி கோயில் குடமுழுக்கு விழா

"பொற்கிழிக் கவிஞர்", "காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் M.A.B.T.

நம் நகரத்தார்களின் "வாட்டிகன்" நகரம் என்றும், "பொற்கோவில்" என்றும் புகழப்பெறும் பூம்புகார் ஸ்ரீபல்லவனீஸ்வர சுவாமி கோவில் ஏராளமான பொருட்செலவில், எண்ணற்ற தொண்டர் களின் திருப்பணியால், இணையற்ற வள்ளல்களின் அருட் கொடையால் சிறப்புற 5-4-95 காலை நிகழ்ந்தது. திருப்பணிக் குழுத்தலைவர் முதல் தொண்டர் வரை அனைவருக்கும் உள்ளூர் மக்கள் அன்று காலைப் பேரவையில் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்ததே அதறக்குச் சான்றாகும்.

முதல் நாள் காலை உரை அரங்கிலும், மாலை கவியரங்கிலும், குடமுழுக்கு அன்று இரவு வழக்காடு மன்றிலும் அடியேன் பங்குகொண்டு பணியாற்றும் இலக்கியப் பொறுப்பினை நிறைவு செய்யும் பேறு கிடைத்தது. புலவர் பெருமக்களும், கவிஞர்களும், விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

திருப்பணிக்குழுத் தலைவர், தேவகோட்டை ஜமீன்தார் திரு.சோம. நாராயணன் செட்டியார் அவர்களும், செயலரும், ரெட்டை ஆனாரூனாக்களும் செய்த சேவை என்றும் நெஞ்சில் இருக்கும். ஐந்து நாட்கள் உணவளித்த மயிலாடுதுறை, தஞ்சைமாவட்ட நகரத்தார்களின் அரும்பணிக்கு ஈடே இல்லை. இலக்கிய சமய நிகழ்ச்சிகளைத் திறம்பட அமைத்து நடத்திய பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களின் தொண்டு பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பெறும்.

தொண்ணூற்று ஆறூர் நகரத்தார் களும் அலைகடலெனத் திரண்டு குடமுழுக்கினைக் கண்டு களித்தனர். இது இந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சம்பவம். இந்நிகழ்ச்சியில் ஏற்பட்ட எழுச்சி பலகாலம் நம்மை வழிநடத்தும்.

உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
அன்பொன்றே யுறுதி யென்பார்,
வண்மையே குலதர்ம மெனக் கொண்டார்,
தொண் டொன்றே வழியாக் கண்டார்,
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான சங்க மொன்று
சேர்த்திட்டாரே.

நகரக் கோயிற் பதிகம்

தருமபுர ஆதீன வித்துவான், சித்தாந்தப் புலவர்
மாமணி, பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன்
செட்டியார் என்கிற தத்புருஷ தேசிகர்

காப்பு

மருதங் குடிப்பதி வாழ்முத லைத்தன வைசியர்கள்
ஒருதங் குடிக்கிறை என்றுகொண் டாடும் உயர்பானைத்
திருதங்கு மார்பினன் நான்முகன் ஆதிய தேவரெல்லாம்
சுருதங்க் ளாற்றுதி கற்பக மூர்த்தி துணைநமக்கே.

இளையாற்றக்குடி

திருமகள் நாமகள் சேர்ந்து தினம்பணி செய்திறைஞ்சப்
பெருமை தருநித்ய கல்யாணி பங்கினன் பேணுமவர்க்(கு)
இருமையு மின்பருள் கைலாய நாதன் இளசைநகர்த்
தரும வணிகர்க் கானாம் பராபரன் தாள்பணிவாம்.

மாற்றூர்

வேற்றூர் களிற்சென்று பல்கால் முயன்றதில் வெற்றியின்றித்
தோற்று வருந்திய கொங்கணர் நெஞ்சத் துயரொழித்துச்
சாற்றும் வணிகர்க் கிறையாய்ப் பெரியதாய் தன்னொடுற்ற
மாற்றுரைஞ் ஞூற்றிறை மாமலர்ப் பாதங்கள் வாழ்த்துவமே.

வயிரவன் கோயில்

மயிலெனுஞ் சாயல் வடிவுடை யம்மை மகிழ்கொழுநன்
தயிரிய மிக்க வடுகத் திருமேனி தாங்கிநிற்போன்
உயிரெனச் சைவத்தைப் பேணும் வணிகர்க் குவந்தபதி
வயிரவன் கோயில் வளரொளி நாதனை வந்திப்பமே.

இரணிக் கோயில்

வாட்கொண்ட கண்ணி சிவபுரந் தாயை மணம்புரிந்து
தாட்கொண்டு நாளும் வணங்கும் வணிகர் தமக்கருள்வான்
நாட்கொண்ட நோயிலா வாழ்வுடன் செல்வங்கள் நல்குமெங்கள்
ஆட்கொண்ட நாதன் இரணியூர் அத்தன் அடிபணிவாம்.

பிள்ளையார்பட்டி

பீடாகும் பிள்ளையார் பட்டித் திருநகர் பேணியுறை
வாடா மலர்மங்கை மாமரு தீசர் மலர்க்கழலே
ஏடார் குழற்சிவ காமி திருவீசர் இன்பதமே
ஈடாரு மில்லா வணிகர் தினம்பணிந் தேத்துவரே.

நேமம்

காமனைக் காய்ந்து சவுந்தர நாயகி கைப்பிடித்த
நேம நகரில் செயங்கொண்ட சோழீச! நீடுசெல்வச்
சேம வணிகர்க்கோர் வைப்பா யிலங்குஞ் சிவபரனே!
சாமி யுனது திருவடிச் சார்பன்றிச் சார்பிலமே.

இலுப்பைக்குடி

வந்தித்து வாழ்த்தும் வணிகர் மரபு வளம்பொலியச்
சிந்திப் பவர்க்கருள் செய்யிலுப் பைக்குடிச் சீர்ப்பதியில்
கந்தக் குழலி சவுந்தர நாயகி காதலுறும்
எந்தையைத் தான்தோன்றி யீசனைத் தேசனை யேத்துவமே.

சூரைக்குடி

நாரைக்கு முத்தி நலந்தந்த நாயகி நானிலத்தில்
சூரைக் குடிப்பதி யாவுடை யன்னை துணைவியெனச்
சாரப் புகழ்புரி சைவன் வணிகர் தமக்கிறைவன்
காரைப் புரைகளத் தேசிக நாதன் கழல்பணிவாம்.

வேலன்குடி

காமாட்சி யம்மைக்குக் காதலன் மாலுக்கு நான்முகற்கும்
தாமாட்சி நல்கிய தந்தை தனக்குத்தாய் தந்தையிலான்
மேமாட்சி மன்னிய வேலன் குடிக்கிறை மெய்வணிகர்
தாமாட் படவாழும் கண்டீசர் பாதம் சரணமக்கே.

நகரத்தாரின் பெருமை

கவியரசு கண்ணதாசன்

உலகமெலாம் நகரத்தார் செய்தசேவை
உயர்கோயில் எழுப்பியது மட்டும்அன்று
இலகுதமிழ் மென்மேலும் ஓங்கச்செய்தார்
இணையிலாக் கல்விக்கே அடிக்கல்லானார்

மலையளவு பொருள்தந்தார் அறத்தைக்காக்க
மக்களைப்போல் கடவுளுக்கும் பங்குவைத்தார்
நிலையுயர்ந்து நின்றவர்கள் இன்றுதாழ்ந்தார்
நேரத்தால் மறுபடியும் எழுந்துநிற்பார்

காளத்தி தன்னிலவர் அறம்தொடங்கி
கன்னியா குமரிவரை தொடர்ந்து செல்லும்
நாளெத் தனைவென்ற போதும்அன்னார்
நற்பெயரை மனிதகுலம் புகழ்ந்துபாடும்

தாளத்தில் தவறாமல் ந டனம்ஆடி
தனைக்காத்துத் தாய்காக்கும் நகரத்தார்கள்
நீள்சுற்றம் எந்நாளும் நிறைந்துவாழ நீயருள்வாய்
மீனாட்சி நெஞ்சத்தாயே!

(1980இல் எழுதிக் கொடுத்தது)

பூம்புகார் வளம்

பேராசிரியர் டாக்டர் மா. இராமலிங்கம் எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறை, பூம்புகார்க் கல்லூரி, மேலையூர் – 609 107.

பொதியத்திற்கும் இமயத்திற்கும் இணையான புகழும் உயர்வும் பெற்றுத் திகழ்ந்த திருநகர் பூம்புகார். இந்நரைத் தமிழிலக்கியங்கள் பூம்புகார், பட்டினம், காவிரிப்படப்பைப் பட்டினம், காவிரிப் படப்பை நன்னகர், காவிரிப் பூம்பட்டினம், பெருநகர், பேரூர், மாநகர், மூதூர், சம்பாபதி, காகந்தி எனப் பல்வேறு பெயர்களால் சுட்டுகின்றன. சோழர்களின் தலை நகராகவும், வணிகப் பெருநகராகவும் திகழ்ந்த இந்நகரின் வளத்தினைக் காண்போம்.

பூம்புகாரின் கழனிவளம்

கழனிவள மிகுதியே நகரங்களின் தோற்றத்துக்கும் அரசுகளின் ஏற்றத்துக்கும் அடிப்படையாய் அமைவதென்பர். பூம்புகார் நெய்தல் வளம் சார்ந்ததாயினும் மருதவளம் மயங்கிய பெரும் பகுதியை உடையது.

வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி

(பட்டினப்பாலை 5,6)

யும் "உறைக் கிணறுகளும்" (பட்டினப் 76) பூம்புகார்க்கழனிகளை விளைவறா நிலமாக்கி வளம் பெருக்கின. வானகிரியில் திருமேனிப் பள்ளம் என்ற இடத்தில் 1800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாசனத்திற்கான 'மதகு' (நீர்த்தேக்கம்) ஒன்றினை இந்தியத் தொல்பொருளாய்வுத் துறையினர் கண்டு பிடித்துள்ளனர். இதன் அமைப்பினைக் கண்டு இன்றைய பொறியியலாளரும் வியக்கின்றனர். மிகுதியான நீர் வெளியேறுதற்குரிய வழி அழகுற வளைவாகச் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. வளைவிற்கேற்பக் கற்களை வளைவாகச் செய்து, சுண்ணாம்புக் காரை கொண்டு கட்டப்பட்டுள்ளது.

நீரின் வேகத்தைக் குறைக்கவும், மதகு சேதப்படாமல் இருக்கவும், படிப்படியாக அமைந்திருக்கிற கீழ் அமைப்பும் கொண்டுள்ளது. காவிரியில் இதைப் போன்ற மதகுகளையும், நீர்ப் பாசனத்துக்குரிய பிற வசதிகளையும் அமைத்து, 'காடு கொன்று நாடாக்கி' ஒருவேலி நிலத்தில் (6 2/3 ஏக்கர்) ஆயிரம் கலம் நெல்விளையச் செய்து சோழவள நாட்டைச் சோறுடைத்தாக்கினர் சோழவேந்தர்கள்.

வணிக வளம்

பொருளாதாரச் செழிப்பிற்கு அடிப்படையாகத் திகழ்வது வணிகம். பூம்புகாரை, "காபேரிஸ்" என்ற பெயரில் வணிகச் சந்தை நகரமாக (Caberis Commercial Market Town) தாலமி குறிப்பிடுகின்றார். உலகக் கடல் வணிகத்தின் நடுநாயகக் களமாகப்பூம்புகார் திகழ்ந்தது. புகார்த்துறை முகத்தில், அசைக்க முடியாத கட்டுத்தறியையும் அசைக்கும் யானையைப் போல அலைகளையுடைய கடலில் அசைகின்ற நாவாய்கள் திரண்டு காணப் படுகின்றன. அவற்றின் 'கூம்பு' என்னும் பாய் மரத்தின் மீது கொடிகள் ஆடிக் கொண்டிருந்தன என்பார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். ஏற்றுமதியும் இறக்கு மதியுமாக நடந்த பூம்புகாரின் கடல் வாணிகத்தில்,

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெரிய வீண்டி

(பட்டினப்பாலை 185 – 192)

ஆகிய பலவகைப் பொருட்கள் வரம்பின்றிக் குவிந்து கிடந்தன. பொருட்களில் புலிச்

சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது. வணிகர் அறவுணர்களுடன் "நெடுநுகத்துப் பகல் போல" நடுவு நிலைமை யுடைய நன்னெஞ்சினாராய், பழியஞ்சி உண்மையே பேசித் தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்பநாடிக் கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉங் குறை கொடாது வணிகம் புரிந்தனர் .

கலைவளம்

பூம்புகாரில் ஓவியக்கலையும் சிற்பக் கலையும் சிறந் தோங்கியிருந்த நிலையை,

வெண்சுதை விளக்கத்து வித்தகரி யற்றிய
கண்கவர் ஓவியம்

(மணிமேகலை 3: 130 – 131)

நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்
பாவைநின் றழூஉம் பாவை மன்றமும்

(சிலம். 5: 137 – 138)

என மேகலையும், சிலம்பும் விளக்கும்.

இயல், இசை, நாடகம் என்று தமிழை மூன்று பிரிவாக வளர்த்தவர்கள் தமிழர். "தெரிமாண் தமிழ் மும்மை" என்பது பரிபாடல் திரட்டு.

பாடலோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன் துய்த்து

(பட்டினப். 113, 114)

வாழ்ந்தவர் தமிழர் என்பதைப் பட்டினப் பாலை பறைசாற்றுகிறது.

பூம்புகாரின் சமய நெறிகள்

மனிதனது ஆன்மீகக் கோட்பாடுகள், அவை பற்றிய தத்துவம், சிந்தனைகள், வாழ்க்கை முறைகள் அடங்கிய அமைப்பைச் சமயம் எனலாம்.

சமயம் என்பது ஆன்மீக முயற்சி. அது கடவுளைப் பற்றிச் சொற்களால் கூறும் இறைமை நூல் அன்று: ஆனால் செயலால், அனுபவத்தால் அறிந்து கொள்வதே ஆகும். அது மனித வாழ்க்கையின் பயனை முற்றுப் பெறச் செய்வதே ஆகும் என்பார் டாக்டர். எஸ். இராதா கிருஷ்ணன்.

உலகியல் வாழ்வில் எல்லா இன்பங்களையும் பெறுகிற தனி மனிதனுக்கும், ஏன் சமுதாயத்திற்கும் கூட திளைப்பில் ஒரு நெருக்கடி ஏற்படும் போது ஆன்மீகத் தேட்டத்திற்குச் சமயத்தை நாடுகிறான். சங்க கால மனித வாழ்வில் நேர்ந்த ஒரு நெருக்கடி, அதற்குப் பிறகு ஏற்பட்ட திருப்பம் சங்கம் மருவிய காலத்தில் சமயச் சார்புடைய வாழ்விற்கு இட்டுச் சென்றது.

நிலாக் கோட்டம்

புனித நீராடல் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையான சமயவினை ஆகும். பூம்புகாரின் கடற்கரை ஓரத்தில் நிலாக் கோட்டமும், தெய்வீகப் பொய்கையும் அமைந்திருந்தன. இவற்றை ஒட்டி "இரு காமத்திணையேரி" (பட்டினப்பாலை. 39) யும் அமைந்திருந்தன. இம்மையிலும் மறுமையிலும் கால இன்பத்தினைக் கொடுத்தற்குரிய ஏரிகள் என இவை நம்பப்பட்டன. இவையே சிலம்பில் சோம குண்டம், சூரிய குண்டம் எனச் சுட்டப்பட்டிருக்கலாம்.

பூதம் காக்கும் பூம்புகார்

தவப்பள்ளி தாழ் காவி
னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு
மாவுதி நறும்புகை முனைஇக் குயிறன்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்

(பட்டினப். 53 – 58)

எனவரும் "தவப்பள்ளி"க்குத் "தவஞ் செய்யும் அமண்பள்ளி பௌத்த ப் பள்ளிகள்" என நச்சினார்க் கினியர் விளக்கம் கூறினா லும் அடுத்து வரும் அடிகளை இயைத்துக் காணும் போது "அந்தணர் பள்ளி" யாகவே இது குறிக்கப்பட்டிருக்க வேண்டும். பட்டினப் பாலை குறிக்கும் இப்பூதத்தை

தவமறைந் தொழுகுந் தன்மை யிலாளர்
அவமறைந் தொழுகும் அலவற்பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்கரி யாளர் புறங்கூற் றாளர்

(சிலம்பு 5 : 128 – 131)

முதலியோரைப் புடைத்துணும் என இளங்கோவடிகள் குறித்துப் புகாரின் சிறப்பினையும் சமய நம்பிக்கையினையும் விளக்குகின்றார். இந்திர விழாவை ஊர்

எடுக்காதிருப்பின் இப்பூதம் புகாரைக் காக்காது நீங்கும் என மணிமேகலை குறிப்பிடுகின்றது.

பரதவர் வழிபாடு

பரதவர் (மீனவர்) மீன் வளம் வேண்டி, "சினைச் சுறவின் கோடு நட்டு" (பட்டி. 86) வழிபட்டனர். சினையையுடைய சுறவின் கொம்பை நட்டு அதனிடத்தே ஏற்றிய வலிய தெய்வத்தை வழிபட்டனர் என்பார் நச்சினார்க்கினியர். டாக்டர். வித்தியானந்தம் திராவிடரின் கடல் தெய்வம் என்பார். தனிநாயக அடிகள் வருணனின் வாகனமாகச் சுறாமீனைக் கருதினார். சினை செழிப்பின் சின்னமாகும். மீன் வளத்தை நாடியவர் சினைச் சுறாமீனின் கொம்பை வழிபட்டனர். மானிடவியலார் இதனை 'ஆவி' நம்பிக்கை வகைகளில் அடக்குவர்.

சமயப் பொதுமை

இந்திர விழா வேத வழியினர் எடுத்த விழாவா? பௌத்தர் எடுத்த விழாவா? என்பது பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. பிறவாயாக்கைப் பெரியோன் சிவன் கோயில் முதல் பால்வகை தெரிந்த கடவுளர் ஈறாகப் பல்வேறு கடவுளர்க்கும் விழாக்கள் நடைபெற்றதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. மணிமேகலை விழாவறை காதையில் இருபத்தெட்டு நாட்கள் நடக்கும் இந்திர விழாவைச் சிலப்பதிகாரம் போலவே பாடுகிறது. இந்திர விழா புத்த சமயச் சார்புடையது என்கிறார் மீனாட்சி முருகரத்தினம். பௌத்தர், அந்தணர், சமணர் முதியோரை ஒருபடித்தாகப் போற்றும் தொல்லோரின் பொது நோக்கினைக் காட்டும் அனைத்துத் தெய்வ வழிபாடாக இந்திர விழா ஏற்றம் பெற்றது என்பார் எஸ். இராமகிருஷ்ணன் (சமய வாழ்வில் வடக்கும் தெற்கும் பக்.83) சங்க இலக்கியங்களில் ஐங்குறுநூறு மட்டும் "இந்திர விழவில் பூவின் அன்ன" (பாடல் 62) என இந்திர விழாவைச் சுட்டுகின்றது. இது நாகார்ச்சுன கொண்டா, சிலம்பு, மேகலை போன்ற இலக்கியங்கள் பூம்புகாரில் மட்டும் கொண்டாடப் பட்டதைக் குறிப்பதை நோக்கும் போது 'இந்திரன்' அவரவர் மதக் கடவுளாகக் கருதப் பெற்ற ஒரு பொதுச் சூழலில் இவ்விழா நடந்திருக்கக்கூடும். பௌத்தத்தில் இந்திரன் (மகேந்திரன்), சமணத்தில் இந்திரன் (சினேந்திரன்), வைதீகத்தில் இந்திரன் (கப்பத்து இந்திரன்) ஆகிய பல்வேறு நிலைகளில் இந்திரன் காணப்பெறுகிறான். வேறு வேறு சிறப்பின் வேறு வேறு செய்வினைகளும் உடைய இத்தகைய மக்கள் ஒன்றுகலந்த ஊராக ஒருகாலத்தில் பூம்புகார் மட்டுமே இருந்திருக்கலாம்.

> மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
> நான்மறை மரபின் தீமுறை யொருபால்
> நால்வகைத் தேவரு மூவறு கணங்களும்
> பால்வகைத் தெரிந்த பகுதித் தோற்றத்து
> வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்
> (சிலம்பு 5: 174 – 178)

என்பதைப் பார்க்கும்போது நால்வகைத் தேவர், பதினெண் கணங்கள், நான்மறை மரபு, தீமுறை வழிபாடு முதலான வைதீக நெறிகள் பூம்புகாரில் சிறந்து திகழ்ந்ததை உணரலாம்.


புறச் சமய நெறிகள்

இந்தியாவின் வடபுலத்தில் தோன்றியவை சமண பௌத்த சமயங்கள். கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே தமிழகத்தில் இச்சமயங்கள் காலூன்றிவளரத் தொடங்கின. பூம்புகாரில் அறவோர் பள்ளிகள், அறனோம்படைகள், (அறக் கோட்டங்கள், புற நிலைக் கோட்டத்துப் புண்ணிய தானங்கள் சிறந்திருந்து சமண நெறிகளை வளர்த்தன.

பூம்புகாரில் பல்லவனீச்சரம் திருக்கோயிலுக் கருகில் நகரத்தார் விடுதிக்குக் கிழக்குப்புறமாகப் புத்த விகாரம் இந்தியத் தொல் பொருளாய்வுத் துறையினரின் அகழ்வாய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தாழ்வாரமும் சதுர வடிவத்தில் உள்ள பல அறைகளும் இதில் காணப்படுகின்றன. தியான நிலையில் புத்த பகவானின் திருவுருவச் செப்புப்படிமம் இங்கு தான் கண்டு பிடிக்கப்பட்டது. இங்கே கிடைத்த சலவைக் கல்லில் புத்தபகவானின் பாதம் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் தாமரை மலர், பூரண கும்பம், ஸ்வஸ்திக் குறி ஆகியவை காணப்படுகின்றன.

> தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
> தாமரைப் பீடிகை தானுண்டு.....
> (மணிமேகலை 3. 65 – 66)


எனவரும் மணிமேகலை வரிகளை இப்பாதம் நினைவூட்டுகிறது.



மீனாட்சி மைந்தன் V.N.C.T. சிதம்பரம் செட்டியார் சிறப்புரை



கருத்தரங்கு நிகழ்ச்சியில் வெற்றி ச. மெய்யப்பன் வரவேற்புரை



கருமுத்து தி.சு. சொக்கலிங்கம் செட்டியார்
அவர்களுக்கு சிறப்பு செய்தல்



பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரம்
இலக்கிய பேருரை

திருவெண்காட்டில் ஒரு கலைக்கோயில்

டாக்டர் ஆ. வேலுச்சாமி சுதந்திரன், இணைப் பேராசிரியர்,
சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

வெண்காடு என்றதும், யாவரின் நினைவிற்கு வருவது, திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் ஆலயமாகும். வாஸ்து சாஸ்திரங்கள், கடற்கரை ஓரங்களையும், ஆற்றோரரங்களையும், காட்டுப் பகுதி களையும், குன்றுகளையும் ஆலயங்கள் அமைப்பதற்குச் சிறந்த இடங்களாகக் குறிப்பிடுகின்றன. கடற்கரை ஓரத்தில் திருச்செந்தூர் முருகன். காவிரிக் கரையில் தஞ்சை பெரிய கோயில். திருவேற்காட்டில் மாரியம்மன் ஆலயம். திருப்பரங்குன்றத்தில் முருகன் கோயில். இதுபோன்று, வெண்காட்டில், இச்சிவன் கோயில் அமைந்திருப்பது தனிச் சிறப்புடையதாகும். இப்பகுதி, முன்பு காடாக இருந்ததற்குச் சான்றாக இன்றும் இப்பகுதியில், முதுமக்கள் தாழிகள் கிடைக்கப்பெறுகின்றன. இக் கோயிலுக்கு ஆதி சிதம்பரமென்ற பெயருண்டென்ற புராணச் செய்தியானது, இதன் பழம்பெருமைக்கு நற்சான்றாக அமையும். மூன்று குளங்களை, திருச்சுற்றில் கொண்ட ஒரே கோயிலென்ற பெருமையும் இக் கோயிலுக்குண்டு. தேவாரப் பாடல் பெற்ற தலமென்பதும் மற்றுமொரு சிறப்பாகும். பட்டினத்தார், மெய்கண்டார் போன்ற ஞானிகளின் தொடர்பும் இக் கோயிலுக்குண்டு. சோழர், பாண்டியர், விசயநகர, மராட்டிய மன்னர்களின் ஆக்கப்பணிகள், இடம் பெற்றிருப்பது, இக்கோயிலின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. சோழ மன்னன் இராசராசன் தன் சதய நாள் விழாவை இக்கோயிலில் நடத்துவதற்கு, நிலங்களைத் தானமாகக் கொடுத்திருக்கிறானென்ற கல்வெட்டுச் செய்தியானது மற்றுமொரு பெருமையாகும்.

இக்கோயிலின் கலைச் சிறப்பும் தனிப் பெருமை கொண்டதாகும். இரண்டு முறை (1954, 1959-ஆம் ஆண்டுகளில்) இக் கோயில் திருச்சுற்றுப் பகுதியிலிருந்து, கோயில் பணி நடந்தபோது, சோழர் கால, குறிப்பாக இராசராசன், இராசேந்திரன் காலத்திய வெண்கலச் சிலைகள் வெளிக் கொணரப்பட்டன. அச்சிலைகள், இன்று கோயில்களிலும், தஞ்சாவூர் கலைக் கூடத்திலும் சென்னை அரசாங்க அருங்காட்சியகத்திலும் இடம் பெற்றுள்ளன.

தஞ்சைக் கலைக் கூடத்திற்கு, இச்செப்புத் திருமேனிகள் தனிப்பெரும் சிறப்பைக் கொடுக்கின்றன. சிவன், பார்வதியின் திருமணத்தைக் குறிக்கும், கல்யாண சுந்தரமூர்த்தி சிற்பம் தனிப் பெருமை காட்டுகிறது. கல்யாண சுந்தரமூர்த்தி சிற்பத்தில் சிவன், பார்வதி, பிரம்மா, விஷ்ணு, இலக்குமி இடம் பெறுவர். சிவன், தன் வலக்கரத்தால், பார்வதியின் வலக்கரம் பற்றியிருக்கும் காட்சி, கலை விருந்து தருகிறது. பிரம்மா ஓமம் வளர்க்கிறார். சிவன் பார்வதி அருகில், விஷ்ணு, இலக்குமி, நிற்கிறார்கள். அக்கினி சாட்சியாக, மணமகன் தனது வலது கரத்தால், மணமகளின் வலது கரத்தைப் பிடிக்கும், இக்கால திருமண முறையையே, இக் கல்யாண சுந்தரமூர்த்தி சிற்பம் எடுத்துக்காட்டுகிறது. இன்றும் சமூகத்தில் தந்தையை இழந்த, அல்லது ஆதரவற்ற, மணமக்களுக்கு, அவளது சகோதரன் துணை நின்று, திருமணத்தை நடத்தி வைப்பது போன்று தந்தையின் ஆதரவு இல்லாத பார்வதிக்கு, சகோதரரான விஷ்ணு துணை நின்று திருமணத்தை நடத்தினார். அதை எடுத்துக் காட்டவே, சிவனின் பின்னர் விஷ்ணு நிற்கிறார். பார்வதியின் அருகில் விஷ்ணுவின் துணையான இலக்குமி நிற்கிறார். இன்றும் மணமகளில் அருகில்,

அவளின் சகோதரரின் மனைவி நிற்பதுதான் திருமண வழக்கமாகும்.

கலையழகு காட்டும் மற்றுமொரு செப்புத் திருமேனி, சிவனின் மற்றொரு வடிவமான இடபவாகன மூர்த்தியாகும். அமெரிக்கா, ரஷியா, இலண்டன், பாரிசு போன்ற நாடுகளில் நடந்த கலைக் கண்காட்சியில், இச்சிற்பம் காட்சிக்கு வைக்கப்பட்டுத் தனிப்பெருமை பெற்றிருக்கிறது. இக்கலைச் சிறப்பிற்கு மூல காரணம், சிவனின் தலையணியாகும். பெரும்பாலும், சிவனின் தலையில் சடை மகுடம், சடைபாரம் தாங்கியிருப்பார். ஆனால், இச்சிற்பத்தில், சிவனின் தலையணி, சாதாரண விவசாயியின் தலைப்பாகையைப் போன்றிருக்கிறது. இதுபோன்ற தலையணியைக் கொண்ட சிற்பத்தை வேறெங்கும் பார்க்க முடியாது. சிவனை, பிராமண வடிவங்களில் வடித்த சிற்பி இந்த ஒரு சிற்பத்தில் மட்டும் விவசாயியாகக் காட்டியிருக்கிறான். உழுவார் உலகத்தார்க்கு ஆணியென்றுதானே, குறள் காட்டுகிறது.

பைரவ மூர்த்தி, பிட்சாடன மூர்த்தி, வள்ளி, தெய்வானையுடன் கூடிய முருகன், கண்ணப்பன், சோழ மன்னன் இராசராசனின் அதிகாரி மும்முடிச் சோழ பிரம்ம தேவராயன், சம்பந்தர் பெருமான் செப்புத் திருமேனிகள், சோழர்காலக் கலைக்கு நல் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். பைரவ மூர்த்தியின் கலையழகை, எவ்வித களங்கமும் இல்லாமல் சிற்பி, சிந்தையை மகிழ்விக்கும் பாங்கில் அமைத்திருக்கிறான். தீச்சுடர் தாங்கிய மகுடமும், உருண்டையான கண்களும், கழுத்தணிகளும், இறைவனின் அச்சுறுத்தும் தோற்றத்தைக் காட்டுகின்றன. ஆடையில்லாத பைரவருக்கு மகிழ்ச்சிப் பெருக்கால், படமெடுத்து ஆடும் அரவம், ஆடையாக அமைந்திருப்பதைக் கண்ணுறும் யாவரும் பேரின்பத்தைப் பெறலாம்.

பிட்சாடனர் திருமேனியின் அழகு, பார்ப்பவர் யாவரையும் மெய்மறக்க வைத்துவிடும். பைரவரைப் போன்று, இத்திருமூர்த்தியும் ஆடை இல்லாமல் தோற்றம் காட்டுகிறார். இத்திருமேனியின், தலைமகுடத்தின் கலைவேலைப்பாடு, கலை வல்லுநர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது. இச்சிற்பம் காட்டும் தத்துவக்கருத்து, வாழ்க்கையில் யாவரும் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும். ரிஷிகள், ரிஷி பத்தினிகளின் ஆணவத்தை அடக்க, சிவன் எடுத்த தோற்றமே பிட்சாடன மூர்த்தியாகும். சிவனின் இப்பேரழகால், ரிஷிபத்தினிகள் தந்நிலை மறந்து, சிவன் மீது முழு கவனத்தையும் காட்டினர். தம் கணவரை மறந்து சிவன் மீது ஆசை கொண்டதால், அவர்கள் கற்பிற்குக் களங்கம் ஏற்படுத்தினர். கற்பை இழந்த நிலையில், தோல்வியும் பெற்றனர். ஒரு பெண்ணிற்கு வீரம் கற்புதானே. அதனால்தான் வள்ளுவரும் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின்' என்று கூறினார். இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட சீதையின் கற்புதானே இராமனுக்கு வெற்றியாக அமைந்தது. அதனால்தான், சீதையைக் கண்ட அனுமன், கண்டேன் கற்பினுக்கணியை என்று புகழ்ந்தான். கற்பென்னும் வீரத்தைக் கொண்டு கண்ணகி மதுரையை எரித்தாள். கற்புடைத் தெய்வம் என்று இலக்கியங்கள் அவளுக்குப் புகழாரம் சூட்டுகின்றன. நளனுக்குப் பெருமை கொடுத்தது தமயந்தியின் கற்பாகும். கற்பை இழந்த பெண், உதிர்ந்த சருகுக்கு ஒப்பாவாள். பெண்ணுடைய கற்பின் பெருமையை உணர்த்தும், இப்பிச்சாடனர் திருமேனியை, ஓர் இலக்கியமென்று உரைத்தால் முற்றிலும் பொருந்துமெனலாம். நிர்வாணத்தில் தோற்றம் காட்டுகிறாரென்று, இச்சிற்பத்தைக் குறை கூறுபவர்களுமுண்டு. நிர்வாணம் என்பது பற்றற்ற தோற்றத்தைக் காட்டுவதாகும். ஆசை அறுமின், ஆசை அறுமின் என்றுதானே ஞானிகள் அறிவுறுத்துகிறார்கள். காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே என்றுதான், பட்டினத்தார் பாடுகிறார். பிறவியாகிய பெருங்கடலை நீந்த வேண்டுமென்றால், மனிதன் நிர்வாண நிலையைப் பெற வேண்டும். இக்கருத்தைக் காட்டவே, சிவன் நிர்வாணத்தைக் காட்டுகிறான். வள்ளி, தெய்வயானையுடன் தோற்றம் காட்டும்

முருகனின் திருமேனி முழு நிறைவு பெற்ற பேரழகைக் காட்டுகிறது. முருகனுக்கு மட்டும் இரண்டு மனைவியர்களா என்று களங்கம் ஏற்படுத்துபவருமுண்டு. குறத்திப் பெண்ணையும், தெய்வப் பெண்ணையும் மணந்திருப்பது தெய்வத்திற்கு முன்னால், வேறுபாடு கிடையாது என்பதைக் காட்டுவதற்காக யென்றுதான், கருத வேண்டும். தெய்வமே வேறுபாடு காட்டாதபோது, மனித இனம் காட்டலாமா? கூடவே கூடாது என்பதுதான் உலக நீதியாகும். கண்ணப்பனின் திருமேனி இயற்கை அழகு காட்டுகிறது. வேடர் குலமாக இருந்தாலும், இறைவனின் பேரருளைப் பெற்று, அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக இடம்பெற்றது கண்ணப்பனின் களங்கமற்ற இறைப்பற்றால்தானே! புறச் செய்கையால் இறைவனின் அருளைப் பெறமுடியா தென்பது உணர்ந்த உண்மை யாகும். இக் கண்ணப்பனின் திருமேனி கண்ணுறும்போது தூய உள்ளத்தோடு இறைவனை வழிபட்டால், யாவரும் முக்தி நிலை பெறலாமென்ற உன்னதக் கருத்து, மனதிலே தோன்றும். மனமது செம்மையானால், மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது மறைமொழியாகும். உள்ளம் பெருங்கோயில் என்றுதானே திருமூலர் குறிப்பிடுகிறார். சோழமன்னன் இராசராசனின் முதலமைச்சராகயிருந்து தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்றைக் கட்டிய மும்முடிப் பிரம்மதேவராயனின் திருமேனி, கைகுவித்த நிலையில் தோற்றம் காட்டுகிறது. பரம்பொருளுக்கு முன்னால் அரசனும், ஆண்டியும் கைகுவித்துத் தானே நிற்க வேண்டும். முடிசார்ந்த மன்னரும், முடிவில் ஒரு பிடி சாம்பலாய், மண்ணாவதும் கண்டு என்பதுதானே ஞானியின் வாக்காகும். சம்பந்தர் திருமேனியின் அழகில், தெய்வீகத்தைப் பார்க்க முடியும். வாழ்க்கையை உலக பந்த பாசத்தோடு சம்பந்தப்படுத்தாது தெய்வத்தைப் பாடுவதையே கடமையாக அமைத்துக் கொண்ட சம்பந்தரின் பெருமையை என்னென்று புகழ்வது.

கோயில் வழிபாட்டிலிருக்கும் நடராசர், சிவகாம சுந்தரி திருமேனிகள் கலையழகுக் கொண்டவையாகும். மற்றொரு நடராசர் திருமேனி, வழிபாடு இல்லாத நிலையில், சோமாசுகந்தர் சன்னதியுள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருக்கிறது. இச்சிலையின் பீடத்தில் ஸ்வஸ்திஸ்ரீ தேசி அபய நிதிய பரண நாயகரென்று கல்வெட்டிருப்பது, இத்திருமேனிக்குப் பெருமை சேர்க்கிறது. இச்சிலை வடிவம், தேசிகக்கூத்தைக் குறிப்பதாக அறிஞர் கருதுவர். வழிபாட்டிலிருக்கும் அகோரமூர்த்தி செப்புத் திருமேனி, காலத்தால்பிற்பட்டதாக இருந்தாலும், இது வழிபாடு பெருமையைப் பெற்றதாகும். முக்குளத்தில் நீராடி, அகோரமூர்த்தியை வழிபட்டுக் குழந்தைச் செல்வங்கள் பெற்றவர்கள் எண்ணிக்கையில் ஏராளம். பெயருக்கேற்ப, முகத்தில் அகோரத் தன்மையைக் காட்டியிருக்கிறான் சிற்பி. கைகூப்பிய நிலையிலிருக்கும் சுவேதகேது மன்னரின் செப்புத் திருமேனி, பிற்காலத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் இது காட்டும் புராணச் சிறப்பு பாராட்டுதற்குரியதாகும். சுவேதகேது என்ற மன்னர், இக்கோயில் இறைவனை வழிபட வரும்போது தடை ஏற்படவே இறைவன் துறை நின்று மன்னனை வழிபடச் செய்திருக்கிறான். இச்செய்தி வால்மீகி இராமாயணத்தில் இடம்பெறுகிறது. இவ்வால்மீக இராமாயணச் செய்தியை என்றும் வெளிப்படுத்திய நிலையில், இச்சிற்பம் அமைந்திருக்கிறது.

சென்னை அருங்காட்சியகத்தி லிருக்கும், அர்த்த நாரீசுவரர், காளி செப்புத் திருமேனிகள், சோழர் கலைப் பாணியில் அமைந்தவையாகும்.

அழகுமிகு செப்புத் திருமேனிகளைத் தந்த இத்திருக்கோயில், ஓர் கலைக் கூடமென்றுரைப்பது முற்றிலும் பொருத்த முடையதாகும். எழுத்தால் கலையழகை இரசிக்க முடியாது. நேரில் சென்றிடுவீர், கலையழகைப் பருகிடுவீர். ஆலயப் பெருமையைப் பார் புகழப் பரப்பிடுவீர்.

நகரத்தாரும் பட்டினத்தாரும்

பொற்கிழிக் கவிஞர் "காசிஸ்ரீ" அரு. சோமசுந்தரன்

பட்டினத்தார் காலத்திற்குப் பிறகு நம் நகரத்தார்கள் ஒரு சில தலைமுறைகள் கழிந்தபின் பாண்டி நாட்டிற்கு - செட்டிநாட்டிற்கு வந்தனர். ஆனால் அவர் பிறந்த வம்சத்தைப் "பட்டினசாமி" என்ற பெயரால் அழைத்துப் போற்றும் மரபினைக் கைக்கொண்டனர்.

"காதற்ற ஊசியும் வாராது காண்நம் கடைவழிக்கே" என்ற வாசகத்தைப் படித்ததும் அப்பொழுதே துறவு பூண்டார் பட்டினத்தார். சொத்துத் தொகையை மட்டுமல்ல, துணியையும் துறந்தார். அன்று முதல் அவருக்குப் பிணியும் அதாவது பிறவிப் பிணியும் நீங்கியது. எனவே தான் "துணி போனால் பிணிபோகும்" என்று பழமொழி எழுந்தது.

தாயார் மறைந்தபொழுது பட்டினத்தார் பாடியபாக்களின் கடைசியில் "எல்லாம் சிவமயமே ஆம்" என்று முடித்தார். அதன் மூலம் குலமுதல்வராகிய மரகத விநாயகரைப் பிள்ளையார் சுழி போட்டு நினைவுகூர்ந்த நகரத்தார்கள், குல அடியாராகிய பட்டினத்தாரைச் "சிவமயம்" என்ற கோஷத்தை எழுதிய தன் மூலம் நினைவு கூர்ந்தார்கள். இன்றும் நகரத்தார்கள் எதையும் எழுதுமுன்பு "சிவமயம்" போடாமல் எழுத மாட்டார்கள்.

செட்டிநாட்டில் நகரத்தார்கள் 9 கோயில்களை வணங்கினாலும், சுமார் 200 ஆண்டுகட்கு முன்பு காரைக்குடியில் தோன்றிய மகாசித்தர் முத்துராமலிங்க ஆண்டவரைப் பட்டினத்தார் வரிசையில் வைத்து வணங்கினார்கள். ஆகவே தான் ஸ்ரீ முத்துராமலிங்கரது திருப்பணியினால் எழுந்த கோவில் உள்ள ஊரைக் கோவிலூர் என்று அழைத்தார்கள். மற்ற ஊர்களின் திருப்பணிகள் எல்லாம் கோவிலூர்த் திருப்பணிக்குப் பிறகே செய்யப் பெற்றன. பட்டினத்தார் பார்வை இன்றும் நகரத்தார்களை நல்வழி நடத்துகிறது.

பலநூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர் பிற
சங்கம் பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை பலவும்
நாட்டி யந்தங்
குலமுயர நகருயர நாடுயர வுழைக்கின்றார்
கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந் தொளிர்க
நிலத்தின் மீதே!

பூம்புகார் வரலாற்றில் புதிய செய்தி

பேராசிரியர் த. தியாகராசன் எம்.ஏ.,
பூம்புகார் கல்லூரி, பூம்புகார்

பூம்புகார் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரம், சோழர்களின் கடற்கரைப் பட்டினமாக அமைந்திருந்தது. உலக வாணிகச் சந்தையாகவும் விளங்கியது. இதை மெய்ப்பிக்கும் வகையில் தாலமி என்ற நிலநூல் வரலாற்று ஆசிரியன் காபெரீஸ் ஆன் எம்போரியம் [KHABERIS' AN EMPORIUM] என்று குறிப்பிட்டுள்ளான்.

புகார், பூம்புகார், காவிரிப் பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி பட்டினம், கவேரபட்டினம், காவிரி படப்பை நன்னகர், காவிரிப் படப்பை ப்ட்டினம், பட்டினம், பெருநகர், மூதூர் என்றெல்லாம் சங்கப் புலவர்கள் பிற்காலப் புலவர் பெருமக்களால் குறிப்பிடப் பட்டுள்ளது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை சங்கப்பாடல்களில் எல்லாம் இந் நகர் பற்றிய அமைப்பு, மக்கள் வாழ்க்கை முறை, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

தலை சிறந்த நகரத்து மக்கள் மேற் கொண்ட வாணிபம் செழிப்பாக வளர்ந்திருந்தது. வெளி நாட்டு வணிகர்கள் போலவே புகார் வணிகர்களும் தம்முள் குழுவாக அமைந்து கடல் கடந்து சென்றும் வாணிபம் செய்தனர். தாம் சென்று தங்கிய புற நாடுகளிலும் நல்லறங்கள் செய்து புகழுடன் வாழ்ந்த செய்தியைப் பண்டைய இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும், காணலாம்.

> **ஈட்டிய வெல்லாம் இதன்பொருட் டென்பது**
> **காட்டிய கைவண்ணம் காட்டினார் – வேட்டொறும்**
> **காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்**
> **தாமரையும் சங்கும்போல் தந்து**

என்ற புறத்திரட்டுப் பாடல் புகார் வணிகர்கள் செய்த அறப் பணிகளுக்குச் சான்று பகரும். சங்கம், இலக்கம், கோடி என்றும் தாமரை, கோடா கோடி என்றும் சொல்லப்படுகிறது. "நெய்தலுங்கு வளையும் ஆம்பலும் சங்கமும்" என்று பரிபாடலில் மிகப் பேரெண்கள் கூறப்பட்டுள்ளன. ஈட்டிய செல்வமெல்லாம் தம் கை வண்மை காட்டற்கே பயன்படுத்திய புகார் வணிகரின் திறன் வியந்து பாராட்டலாம்.

பட்டினப் பாக்கம், மருவூர்ப்பாக்கம், நாளங்காடி என்ற அமைப்புடன் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியதைச் சிலப்பதிகாரத்தில் விளக்க மாகக் காணலாம். இலக்கிய வழி அறிந்த புகாரின் இன்றைய நிலையில் ஏதும் காண இயலாத நிலை என்றாலும் புதைபொருள் ஆராய்ச்சி வழி பழம் பெரும் நகரை வெளிப்படுத்தி யுள்ளார்கள். அதன் வழி நம் இலக்கியத்தில் காணப்படும் பெயர்கள், இடங்கள் இவற்றை ஆதாரமாகக் கொண்டு சில உண்மைகளைக் காணலாம்.

> **வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
> **நெல்கொடு வந்த வல்வாய்ப் பஃறி**
> **பணைநிலைப் புரவியின் அணைமுதல்**
> **பிணிக்கும்**
> **கழி சூர் படப்பை ....**
> **பட்டினப்பாலை.**

என்ற வரிகளில் உப்பு விற்ற நெல்லைக் கொண்டுவந்த படகுகளைப் பந்தியிலே நிரல் படக் குதிரைகளைப் பிணிக்குமாறு போலத் தறிகளிலே பிணித்துள்ள காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறார், உருத்திரங்கண்ணனார்.

ஓடங்களுக்கென அமைந்த இடங்களில் பொருள்களை ஏற்றவும்

இறக்கவும் வசதியாகச் சிறிய படகுத் துறைகளும் (Ship yard) இருந்தன என்பதைப் புதை பொருள் ஆய்வில் கண்ட சான்று உறுதி அளிக்கிறது. கிழையூர் கிராமத்தில் மங்கை மடம் என்ற வயலில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது கடலுக்குச் சுமார் 4 பர்லாங் தூரத்தில் உள்ளது குறிப்பிடத் தக்கது. இத்துறை சுமார் 60 அடி நீளத்தில் 25 அடி அகலத்தில் அமைந்துள்ளது. இதில் உள்ள பல செங்கற்கள் இரண்டேகால் அடி நீளமும் ஒன்றரை அடி அகலமும் மூன்று அங்குல கனமும் கொண்டனவாகவும் சில ஒன்றரை அடி சதுர வடிவில் அமைந்த கற்களாகவும் உள்ளன. இதைக் கட்டுவதற்கு நல்ல ஒட்டுந்தன்மை வாய்ந்த களி மண்ணைச் சந்தனம் போல் குழைவாக அரைத்துக் கல்லைப் பொருத்தி இருக்கிறார்கள். இதன் இடையே இணையாக மரத்தாலான கம்பங்கள் புதைக்கப்பட்டுள்ளன. பட்டினப் பாலையின் மேற்கண்ட அடிகள் சான்றாக அமைந்துள்ளன. புகார் நகரத்து வணிகர்கள் "மணிக் கிராமத்தார்" என்ற பெயரில் குழுவாக இருந்து கடற்றுறைப் பட்டினங்களிலும், வெளி நாடுகளிலும் வாணிபம் நடத்தினர் எனக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். அவர்கள் புகாரில் தமக்கென அமைத்துக் கொண்ட வணிகத் துறையாக இருக்கக் கூடும் என்று கருத வேண்டியுள்ளது. இதில் இருந்த மரத்துண்டை (Carpondate) ஆராய்ச்சி செய்ததில் அதன் காலம் கி.மு.300 ஆண்டுகள் எனக் கணித்துள்ளனர். இப்படகுத் துறை இன்று சிற்றூராக உள்ள மணிக் கிராமத்திற்கு நேர் கிழக்கில் உள்ளது குறிப்பிடத் தக்கதாகும். கல்வெட்டில் "காவிரிப்பூம் பட்டினத்து மணிக் கிராமத்தார்" குழுவாக இருந்து வாணிபம் செய்த வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இது கொண்டு நோக்கினால் இன்று மணிக்கிராமம் என்ற பெயரில் உள்ள ஊர் அந்நாளில் காவிரிப்பூம்பட்டினத்து மணிக் கிராமத்தார் வாழ்ந்த இடம் என்பது தெளிவாகிறது.

இது போலவே காவிரிப்பூம் பட்டினத்தில் பெருங்கலங்கள் தங்கும் துறை முகத்தையும் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகிறார்.

வெளில் இளக்கும் களிறு போல்
தீம்புகார்த் திரைமுன் துறை
தூங்கு நாவாய் துவன்று இருக்கை
மிசைக் கூம்பின் நசைக் கொடியும்.

அசையாத கம்பத்தினை அசைக்கும் யானைபோல் நின்று கொண்டிருக்கிற கலங்களைக் காண்கிறோம். அது அசைகின்ற அசைவிலே பாய்மரத்தின் மேலே உயர்த்தப்பட்ட கொடிகளின் அசைவையும் பார்க்கிறோம். முன்னர் படகு வரிசைக்குக் குதிரைகள் . வரிசையை உவமையாகக் கொண்டவர், இங்குப் பெரிய மரக்கலங்கள் நிறுத்தப்பட்டுள்ளதை யானை வரிசையோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். கப்பல் துறை இருந்த இடம் இன்று கடலால் சூழப்பட்டுள்ளது.

பூம்புகாரில் பல கோயில்களும் பள்ளிகளும் இருந்தன என்பதைப் பட்டினப்பாலையும், சிலம்பும் மணிமேகலையும் குறிப்பிடுகின்றன.

பிறவா யாக்கைப் பேரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

எனச் சிலம்பும்,

தவப் பள்ளி தாழ் காவின்
அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்

எனப் பட்டினப்பாலையும்,

பளிக்கறை மண்டபம் உண்டுஅத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பிடிகை தான் உண்டு

என மணிமேகலையும் குறிப்பிடும். "மாணிக்கச் சோதி பரந்த பதும பீடம்" என்றும் "பளிக்கறையில் உள்ள பாதபீடம்" என்றும் "இவன் பாதத்தில் சஸகஸ்ராரச சக்கர ரேகை உண்டென்பார்" என்றும் குறிப்புரைகாரர் உரைத்துள்ளார். இவற்றை எல்லாம் நோக்கினால் புகாரில் பௌத்தமும் சமணமும் சிறப்புறத் திகழ்ந்து இருந்தன

என்பது தெளிவாகிறது. இதை மனதில் கொண்டு புதை பொருள் ஆய்வாளர் கண்ட புத்த விகாரத்தை ஆராய்வோம். புத்த விகாரம் பல்லவனீச்சரம் கோயிலுக்கு வட புறத்தில், நகரத்தார் விடுதிக்குக் கீழ்ப் பக்கத்தில் தோண்டிக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இது சதுர வடிவில் அமைந்த பல அறைகளைக் கொண்டது. முன்புறம் தாழ்வாரம் காணப்படுகிறது. அங்கு ஒரு சதுரவடிவான அறையில் 3 அங்குல உயரத்தில் புத்த பகவானின் செப்புப் படிமம் கிடைத்துள்ளது. இது தியானம் செய்யும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. மணிகளும் காசுகளும் கிடைத்தன. இந்த விகாரத்தில் தென்புறத்தில் ஒரு அறையில் வெண்ணிறச் சலவைக் கல்லில் புத்த பகவானின் பாதம் பொறிக்கப்பட்டுள்ளது. தாமரை மலரும், பூரண கும்பமும், ஸ்வஸ்திக் அடையாளமும் பொறிக்கப்பட்டுள்ளன. இது நாகார்ச்சுன கொண்டாவில் கண்டெடுக்கப் பட்ட புத்த பாதத்துடன் பொருந்திய பழமையுடையது ஆகும். அங்கிருந்தே இக்கல் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் முடிவு செய்கிறார்கள். மற்றும் அங்கு அர்த்த சந்திர வடிவில் அமைந்த கருங்கல் அடிப்பீடமும் கிடைத்தது. அழகு மிகுந்த, சிற்ப நுட்பம் செறிந்த துவார பாலகரின் உருவம் கிடைத்துள்ளது. இது சுண்ணாம்புக் கல்லால் ஆன சாந்தினால் செய்யப்பட்டது. தென்னகத்தில் முதல் முதலாக இங்கே தான் புத்த விகாரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இதில் இரு வேறு காலங்களில் கட்டப்பட்ட இரண்டுவிதமான பாணியைக் காணலாம் என்றும், அதன் வழிப் பழங்காலத்தில் கட்டியது ஒன்றும் பின்னர் அழிவின் மேல் மீண்டும் கட்டியது ஒன்றும் ஆக இருவேறு காலங்களில் கட்டப்பட்டு அழிந்துள்ளமையைப் புதைபொருள் ஆய்வாளர் உறுதிப் படுத்துகின்றனர். அதில் அமைந்த புதை குழி ஒன்றில் பசுவின்தலை ஓடு ஒன்று ஒரு வட்டவடிவில் அமைத்து அதன் நடுவில் வைக்கப்பட்டு இருந்தது. அதன் காலம் அறிய ஆய்வுக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் உறவினரான மகிந்தன் [மகா இந்திரன் என்னும் பெயர் பாலியில் மகிந்தன் என வழங்கும்] என்பவர் இலங்கை செல்லும் முன் காவிரிப்பூம் பட்டினத்தில் தங்கி அங்கு ஏழு புத்த விகாரங்களைக் கட்டினார் என்றும், அதுவே இலக்கியத்தில் இந்திரனால் நியமிக்கப் பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றும் சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றனர். பௌத்த துறவியாக மணிமேகலை இந்த விகாரையில் தான் தங்கி இருந்தாள் என்றும் கொள்ள வாய்ப்புள்ளது.

மேலும் வாணகிரியில் திருமேனி பள்ளம் என்ற இடத்தில் நீர் வெளியேற்றும் வகையில் மதகுஒன்றும் [Reservioyer] கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சிலம்பில் காணும் மதகோதை, உடை நீரோதை சிறக்க நடந்த காவிரியைப் பற்றிப் பாடுவார் இளங்கோ.

வெள்ளையன் இருப்பு என்னும் இடத்தில் ரோமானிய மன்னர் அகஸ்டஸ் வெளியிட்ட செப்புக்காசு ஒன்றும் கிடைத்தது. இதனால் வெளி நாட்டு வணிகர்கள் புகாரில் தங்கி இருந்த இடமாக இருக்க வேண்டும் என உறுதி செய்யலாம். சாய்க்காடு - சாயாவனம் என்று இன்றும் மக்களால் வழங்கப்பட்டு வருகிறது.

செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட் டன்ன
–நற்றிணை 73

நெடுங்கதிர் கழனித் தண்சாய்க் கானம்
– அகம் 220

என்று சங்கப் பாடல்களில் குறிக்கப் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தரும் தம் தேவாரத்தில்,

தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்,
காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி

என்றும் குறிப்பிட்டுள்ளார். மற்றும்

பாரரக்கம் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே

என்றும் சாய்க்காட்டையும் பல்லவனீச்

சரத்தையும் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டிலும் சாய்க்காடு "புகார் நகரத்துச் சாயை" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கப் பாடல்களில், "கழாஅர்", "கழாஅர் முன்றுறை", "காழாஅர்ப் பெருந்துறை" என்றெல்லாம் குறிப்பிடப் பட்டுள்ள இடம் இன்று "கழுதகாரன் துறை" என்று பிழைபட மக்களால் அழைக்கப் படுகிறது. அந்த இடம் இன்று காவிரி நெடுஞ்சாலையைக் குறுக்கிடும் இடத்தில் உள்ளது. கழார்க்கீரன் எயிற்றியார் என்ற புலவர் பெயரோடும் சேர்த்துக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

சாய்க்காட்டுத் திருக்கோயிலுக்குத் தென்பக்கத்தில் சம்பாபதி கோயில் உள்ளது. மணிமேகலையில் குறிப்பிடப்படும் தெய்வம் சம்பாபதி என்பது பலரும் அறிந்ததே. சிலம்பில் மாடலன் வாழ்ந்த ஊராகத் தலைச் செங்காடு என்பதை "தாழ்நீர் வேலித் தலைச் செங்கானம்" என்றும் இளங்கோ குறிப்பிடும் இடமும் கழார்த்துறைக்கு மேற்கே உள்ளது.

மேலும் பட்டினத்தார் வாழ்ந்த காலத்திலும் புகாரில் வணிகர்கள் இருந்து கப்பல் வழி வாணிபம் மேற்கொண்டனர் என்பது அறிந்த செய்தி யாகும். இயற்பகை நாயனார் வரலாறு நிகழ்ந்த இடம் சாய்க்காட்டுப் பகுதி என்பதும் தெளிவான செய்தி யாகும். எனவே 12 ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற்று விளங்கிய புகார் மாறவர்மன் சுந்தர பாண்டியன் படையெடுப்பால் பெரும் பகுதி அழிந்தது என்பதும் கல்வெட்டுச் செய்தியாகும்.

பூம்புகார் வரலாற்றில் புதை பொருள் ஆய்வும் கடலாய்வும் வெளிப்படுத்தி இருக்கும் செய்திகள் பயன் நிறைந்த, புதிய உண்மைகளை வெளிப் படுத்தியுள்ளன. நிலத்தில் ஆய்வு செய்ததில் கி.மு. 300 ஆண்டுக்கு முந்தைய சான்றாக படகுத் துறையும் முதல் நூற்றாண்டு தொடங்கி கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை உரிய சான்றும் கிடைத்துள்ளது. சோழர் காலத்துக் காசுகளும், மணிகளும், தாழிகளும் பழமையை நிலை நிறுத்தும் சான்றுகளாகும்.

அண்மையில் கடலில் ஆய்வு நடந்து வருகிறது. கடந்த இரண்டாண்டுகளில் கண்ட சின்னங்கள், கட்டிடங்களில் அஸ்திவாரம், பானை ஓடுகள், சுவர்கள் எல்லாம் கடற்கோளாலோ, அல்லது இயற்கையாகவோ, கடல் மேலே வந்து கொண்டிருப்பதாலோ அழிவு ஏற் பட்டுள்ளது. கடலில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு கட்டிடப்பகுதிதென்படுகிறது. மேலும் ஆய்வில் காவிரியின் போக்கு மாறியுள்ளதையும் கண்டுபிடித்துள்ளார்கள். கரையார் என்று பன்னெடுங் காலமாகவே மீனவர்களால் குறிப்பிடப்படும் இடத்தை ஆய்வு செய்ததில் அதில் பெரும் சுவர் காணப்படுகிறது. நடுவில் ஸ்தூபம் ஒன்றும் காணப்படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் காவிரி நெய்தல் வாசல் கிராமத்தின் வழியே சென்று கரையபார் என்று குறிப்பிடப்படும் இடம் வரை காவிரியின் பழைய தடம் தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் நெய்தல்வாசல் காவிரிப்பூம்பட்டினம் கண்ணகி சிலை எதிப்புறம் தற்போது ஓடும் காவிரியின் முன்பும் பழைய இடிந்த சுவர்களும் கட்டிடத்தின் அடிப்பகுதியும் காணப்படுகின்றன. இன்றைய காவிரி முகத்திற்கு நேர் கிழக்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு கப்பல் மூழ்கியுள்ளதையும் கண்டு பிடித்துள்ளார்கள். கரையப்பார் கப்பகரப்பு என்னும் இடங்களின் ஆழம் 75 அடி ஆகும். எனவே புகார் நகரம் 5 கிலோ மீட்டர் தூரம் கடலுள்பட்டது என்பது உறுதியாகிறது. குறிப்பாக மருவூர்ப்பாக்கப் பகுதிகள் கடலிலும் பெரும்பகுதியாகப் பட்டினப்பாக்கப் பகுதியும் நாளங்காடிப் பகுதியும் நிலப் பகுதியில் சிதைந்துள்ளன என்பது உறுதியாகிறது. இன்றுள்ள நிலப் பகுதி கருவேந்தநாதபுரம் வரையில் உள்ள ஊர்களை உள்ளடக்கிய பகுதி, பழம் பெயர் புகாரின் பகுதிகளாகும் என்பதும் தெளிவாகிறது. இங்கெல்லாம் புதை பொருள் ஆய்வு மேற் கொண்டால் மேலும் பல கட்டிடங்கள், புதிய வரலாற்றுச் செய்திகள் கிடைக்கும் என்பது உறுதி.

செட்டிநாட்டு வட்டகைப் பிரிவு

1. பதினாறூா வடடகை

1. காரைக்குடி
2. பள்ளத்தூர்
3. கண்டனூர்
4. புதுவயல்
5. கோட்டையூர்
6. உ.சிறுவயல்
7. பலவான்குடி
8. ஆத்தங்குடி
9. ஆ.முத்துப்பட்டணம்
10. அரியக்குடி
11. கொத்தமங்கலம்
12. கொ.லெட்சுமிபுரம்
13. அளகாபுரி
14. கானாடுகாத்தான்
15. கல்லல்
16. மாநகரி
17. கல்லுப்பட்டி
18. நேமுத்துப்பட்டி
19. சொக்கலிங்கம் புதூர்
20. ஜெயங்கொண்டபுரம்
21. அமராவதிபுதூர்

2. மேலப்பத்தூர்

1. வலையபட்டி
2. கூழிபிறை
3. நச்சாந்துபட்டி
4. வேந்தன்பட்டி
5. மேலைச்சிவபுரி
6. புதுப்பட்டி
7. வேகுப்பட்டி
8. கொப்பனாபட்டி
9. விரையாச்சிலை
10. இராங்கியம்
11. பனையப்பட்டி
12. குருவிக்கொண்டான்பட்டி
13. மிதிலைப்பட்டி
14. வி. லெட்சுமிபுரம்
15. பொன்னமராவதி

மேல வட்டகை

1. கீழச்சிவல்பட்டி
2. நெற்குப்பை
3. கண்டவராயன்பட்டி
4. சிறுகூடல் பட்டி
5. பூலாங்குறிச்சி
6. நாச்சியாபுரம்
7. ஆ. தெக்கூர்
8. உலகம்பட்டி
9. செவ்வூர்
10. விறாமதி
11. மகியாலன்பட்டி
13. பிள்ளையார்பட்டி
14. ஆவினிப்பட்டி
15. பரியாமருதபட்டி

கீழை வட்டகை

1. தேவகோட்டை
2. சண்முக நாதபுரம்
3. தாணிச்சாவூரணி

தெற்கு வட்டகை

1. நாட்டரசன் கோட்டை
2. பாகனேரி
3. கண்டரமாணிக்கம்
4. அலவாக்கோட்டை
5. அ. சிறுவயல்
6. சொக்க நாதபுரம்
7. கீழப்பூங்குடி
8. ஒக்கூர்
9. சோக்கலிங்கபுரம்
10. நடராஜபுரம்
11. வெற்றியூர்
12. பட்டமங்கலம்
13. காளையார்மங்கலம்
14. கருங்குளம்
15. நா. அழகாபுரி
16. செம்பனூர்
17. பனங்குடி
18. சக்கந்தி
19. சோழபுரம்

கீழப்பத்தூர்

1. அரிமளம்
2. இராமச்சந்திரபுரம்
3. இராயபுரம்
4. தேனிபட்டி

நீண்ட கரைப்பிரிவு

1. கோனாபட்டு

சோ. முருகப்பா, பிச்சப்பா சுப்பிரமணியன், ராய சொக்கலிங்கம் இவர்களால் தொடங்கப்பட்ட தனவைசிய இளைஞர் சங்கத்தால் 70, ஆண்டுகளுக்கு முன் கோவிலூரில் கூடிய கூட்டத்தில் வெளியிடப்பட்டது. இது பற்றி, சோமலெ 'செட்டி நாடும் செந்தமிழும்' எனும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பெயர் அடிப்படையில் 76 ஊர்கள்

கோட்டை

அலவாக்கோட்டை
தேவகோட்டை
நாட்டரசன் கோட்டை 3

குடி

அரியக்குடி
ஆத்தன் குடி
காரைக்குடி
கிழப்பூங்குடி
பலவான்குடி
பனங்குடி 6

ஊர்

கண்டனூர்
பள்ளத்தூர்
கோட்டையூர்
ஆ. தெற்கூர்
செவ்லூர்
சொக்கலிங்கம்புதூர்
வெற்றியூர்
செம்பனூர்
அமராவதிபுதூர்
ஒக்கூர் 10

புரம்

நாச்சியாபுரம்
சொக்கநாதபுரம்
கொ. லெட்சுமிபுரம்
வி.லெட்சுமிபுரம்
நடராஜபுரம்
சோழபுரம் 6

பட்டி

வலையபட்டி
கடியாபட்டி
வேந்தன்பட்டி
நற்சாந்துபட்டி
கண்டவராயன்பட்டி
கிழச்சிவல்பட்டி
பொன். புதுப்பட்டி
கொப்பனாபட்டி
சிறுகூடற்பட்டி
நேமத்தான்பட்டி
வேகுப்பட்டி
கல்லுப்பட்டி
பனையப்பட்டி
பிள்ளையார்பட்டி
குருவிக்கொண்டான்பட்டி
மதகுப்பட்டி
மிதிலைப்பட்டி
ஆவினிப்பட்டி
உலகம்பட்டி
மகிபாலன்பட்டி
தேனிபட்டி 21

புரி

பி. அழகாபுரி
கொ. அழகாபுரி
கோ. அழகாபுரி
மேலச்சிவல்புரி 4

வயல்

புதுவயல்
உ. சிறுவயல்
அ. சிறுவயல்
ஆறாவயல்
சிறாவயல் 5

மங்கலம்

கொத்தமங்கலம்
காளையார்மங்கலம்
பட்டமங்கலம் 3

வரம்

இராயவரம் 1

ஏரி

பாகனேரி 1

சிலை

விரையாச்சிலை 1

குளம்

கருங்குளம் 1

ஊரணி

தாணிச்சாவூரணி 1

பிறை

குழிபிறை 1

மதி

விராமதி	1

குறிச்சி

பூலாங்குறிச்சி	1

பிற ஊர்கள்

அரிமளம்
ஆ. முத்துப்பட்டணம்
இராங்கியம்
கண்டரமாணிக்கம்
கல்லல்
கானாடுகாத்தான்
கோனாபட்டு
மானகிரி
நெற்குப்பை
சக்கந்தி 10

மொத்த ஊர்கள் 76

எழுபத்தாறு ஊர்களைப் பற்றிய வெண்பா

கோட்டையிலே மூன்று; குடிகளிலே ஆறாகும்
பாட்டைவளர் பட்டிஇரு பத்தொன்று - நாட்டமிகும்
ஊர்பத்தாம்; ஏரி, குளம், ஊருணி, ஒவ்வொன்றாம்;
சேர்வயல்கள் ஐந்தென்று செப்பு.
மங்கலம் மூன்று; வரம்ஒன்றே; ஆறுபுரம்
திங்கள்வகை ஒவ்வொன்று; சீர்புரிகள் நான்கு;
பிறஊர்கள் பத்து; சிலை குறிச்சி ஒன்றோ(டு)
அறம்வளர்ப்பார் ஊர்எழுபத் தாறு.

திங்கள் வகை : விராமதி; குழிபிறை.

நகரத்தார் வாழும் எழுபத்தாறு ஊர்கள்

தகவல்கள் : நன்றி : தேவகோட்டை சின்னவடிவேல் செட்டியார் மணிவிழா மலர்

வரிசை எண்	ஊர்ப்பெயர்	மாவட்டம்	பின்கோடு
1.	அமராவதிபுதூர்	பசும்பொன்	623301
2.	அரண்மனைச் சிறுவயல்	"	623305
3.	அரிமழம்	புதுக்கோட்டை	622201
4.	அரியக்குடி	பசும்பொன்	623202
5.	அலவாக்கோட்டை	"	623564
6.	ஆத்தன்குடி	"	623101
7.	ஆத்தன்குடி முத்துப்பட்டணம்	"	623101
8.	ஆத்திக்காடு (தெற்கூர்)	"	623201
9.	ஆவினிப்பட்டி	"	623205
10.	ஆறாவயல்	"	623314
11.	இராங்கியம்	புதுக்கோட்டை	622409
12.	இராயவரம்	"	622506
13.	உய்யக்கொண்டான் சிறுவயல்	பசும்பொன்	623208
14.	உலகம்பட்டி	"	622410
15.	ஒக்கூர்	"	623557
16.	கடியாபட்டி	புதுக்கோட்டை	622505
17.	கண்டரமாணிக்கம்	பசும்பொன்	623204
18.	கண்டவராயன்பட்டி	"	623203
19.	கண்டனூர்	"	623104
20.	கருங்குளம்	"	623204
21.	கல்லல்	"	623305
22.	கல்லுப்பட்டி	"	623306
23.	காரைக்குடி	"	623001
24.	காளையார்மங்கலம்	"	623557
25.	கானாடுகாத்தான்	"	623102
26.	கீழச்சிவல்பட்டி	புதுக்கோட்டை	623205

27.	கிழப்பூங்குடி	பசும்பொன்	623552
28.	குருவிக்கொண்டான்பட்டி	"	622419
29.	குழிபிறை	புதுக்கோட்டை	622402
30.	கொத்தமங்கலம்	பசும்பொன்	623105
31.	லெட்சுமிபுரம்	"	623105
32.	கொப்பனாபட்டி	புதுக்கோட்டை	622401
33.	கொல்லங்குடி அழகாபுரி	பசும்பொன்	623561
34.	கோட்டையூர்	"	623106
35.	கோட்டையூர் அழகாபுரி	"	623106
36.	கோனாபட்டு	புதுக்கோட்டை	622503
37.	சக்கந்தி	பசும்பொன்	623520
38.	சிராவயல்	"	623214
39.	சிறுகூடல்பட்டி	"	623215
40.	செம்பனூர்	"	623313
41.	செவ்வூர்	"	623405
42.	சொக்கநாதபுரம்	"	623313
43.	சொக்கலிங்கம்புதூர்	"	623101
44.	சோழபுரம்	"	623503
45.	தாணிச்சாவூரணி	"	623302
46.	தேவகோட்டை	"	623302
47.	தேனிபட்டி	புதுக்கோட்டை	622202
48.	நடராஜபுரம்	பசும்பொன்	623555
49.	நற்சாந்துபட்டி	புதுக்கோட்டை	622404
50.	நாச்சியாபுரம்	பசும்பொன்	623207
51.	நாட்டரசன்கோட்டை	"	623556
52.	நெற்குப்பை	புதுக்கோட்டை	622405
53.	நேமத்தான்பட்டி	பசும்பொன்	623103
54.	பட்டமங்கலம்	"	623310
55.	பலவான்குடி	"	623208
56.	பள்ளத்தூர்	"	623107
57.	பனங்குடி	"	623555
58.	பனையப்பட்டி	புதுக்கோட்டை	622406
59.	பாகனேரி	பசும்பொன்	623558
60.	பிள்ளையார்பட்டி	"	
61.	பில்லமங்கலம் அழகாபுரி	"	623207
62.	புதுவயல்	பசும்பொன்	623108
63.	பூலாங்குறிச்சி	புதுக்கோட்டை	623413
64.	பொன். புதுப்பட்டி	"	622408
65.	மகிபாலன்பட்டி	"	623217
66.	மதகுப்பட்டி	பசும்பொன்	623553
67.	மானகிரி	பசும்பொன்	623307
68.	மிதிலைப்பட்டி	புதுக்கோட்டை	622409
69.	மேலைச்சிவல்புரி	"	622403
70.	வலையபட்டி	புதுக்கோட்டை	622411
71.	விராமதி	"	623212
72.	விரையாச்சிலை	"	622412
73.	விரையாச்சிலை இலட்சுமிபுரம்	"	622412
74.	வெற்றியூர்	பசும்பொன்	623321
75.	வேகுப்பட்டி	புதுக்கோட்டை	622408
76.	வேந்தன்பட்டி	"	622419

மாவட்டம், பின்கோடு பற்றிய தகவல்கள் திருத்தத்திற்கு உட்பட்டவை.

நகரத்தாரின் ஒன்பது கோயில்களும் அதன் பிரிவுகளும்

இளையாற்றக்குடிக் கோயில்

சுவாமி பெயர் - கைலாசநாதர்
அம்மை பெயர் - நித்திய கல்யாணி

பிரிவுகள் :

கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான குல சேகரபுரத்தில்.

1) ஒக்கூருடையார்
2) அரும்பாற்கிளையாரான பட்டணசாமியார்
3) . பெருமருதூருடையார்
4) கழனிவாசக்குடியார்
5) கிங்கிணிக்கூருடையார்
6) பேரசெந்தூருடையார்
7) சிறுசேத்தூருடையார்

மாற்றூர்க் கோயில்

சுவாமி பெயர் - ஐநூற்றீசர்
அம்மை பெயர் - பெரியநாயகி

பிரிவுகள் :

கேரள சிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்

1) உறையூருடையார்
2) அரும்பாக்கூருடையார்
3) மணலூருடையார்
4) மண்ணூருடையார்
5) கண்ணூருடையார்
6) கருப்பூருடையார்
7) குளத்தூருடையார்

வைரவன் கோயில்

சுவாமி பெயர் - வளரொளிநாதர்
அம்மை பெயர் - வடிவுடையம்மை

பிரிவுகள் :

கேரள சிங்கவள நாடாகிய ஏழகப்பெருந் திருவான வீரபாண்டியபுரத்தில்

1) சிறுகுளத்தூருடையார்
   இதில் உள்பிரிவுகள்
   1) பெரிய வகுப்பு
   2) தெய்யனார் வகுப்பு (தெய்வ நாயகர் வகுப்பு)
   3) பிள்ளையார் வகுப்பு
2) கழனிவாசலுடையார்
3) மருதேந்திரபுரமுடையார்

இரணியூர்க் கோயில்

சுவாமி பெயர் - ஆட்கொண்டநாதர்
அம்மை பெயர் - சிவபுரந்தேவி

1) கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான, குலசேகரபுரத்தில், இரணியூர் மருதங்குடியான ராசநாராயணபுரத்தில், இரணியூர்த்திருவேட்பூருடையார்.

பிள்ளையார்பட்டிக் கோயில்

விநாயகர் பெயர் - கற்பகவிநாயகர்
சுவாமி பெயர் - திருவீசர்
அம்மை பெயர் - சிவகாமவல்லி
சுவாமி பெயர் - மருதீசர்
அம்மை பெயர் - வாடாமலர் மங்கை

1) கல்வாச நாட்டில் இளையாற்றக் குடியான, குலசேகரபுரத்தில், இரணியூர், மருதங்குடியான ராசநாராயண புரத்தில், பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்

நேமங்கோயில்

சுவாமி பெயர் - செயங்கொண்ட சோளேசர்
அம்மை பெயர் - சவுந்தர நாயகி

1) கேரள சிங்கவளநாட்டில் நேமமாகிய குலசேகரபுர்த்தில், தேனாறுபாயும், இளநலமுடையார்.

இலுப்பைக்குடிக் கோயில்

சுவாமி பெயர் - தான்றோன்றியீசர்
அம்மை பெயர் - சவுந்தரநாயகி

1) கேரள சிங்கவளநாடாகிய பிரம்பூர் நாட்டில், இலுப்பைக்குடியான, புகலிடங்கொடுத்தபட்டணத்தில், சூடாமணிபுரமுடையார்

சூரைக்குடிக் கோயில்

சுவாமி பெயர் - தேசிகநாதர்
அம்மை பெயர் - ஆவுடைநாயகி

1) கேரள சிங்கவளநாட்டில் சூரைக்குடி யான, தேசிகநாராயணபுரத்தில் புகழ் வேண்டிய பாக்கமுடையார்

வேலங்குடிக் கோயில்

சுவாமி பெயர் - கண்டீசுவரர்
அம்மை பெயர் - காமாட்சியம்மை

1) கேரள சிங்கவளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில் கழனிநல்லூருடையார்.

பெருமைக்குரிய நகரத்தார்கள்

பெயர்	தோற்றம்	மறைவு
ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்	30-9-1881	15-6-1948
ராஜா சர் மு. அ. முத்தையாச் செட்டியார்	5-8-1905	12-5-1984
கருமுத்து தியாகராசச் செட்டியார்	16-6-1893	29-7-1974
டாக்டர் ஆர் எம். அழகப்ப செட்டியார்	6-4-1909	5-4-1957
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்	16-10-1881	24-10-1953
தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கனார்	30-10-1898	30-9-1974
சொ. முருகப்பா	21-8-1893	20-6-1956
பாடுவார் முத்தப்ப செட்டியார்	1750	20-10-1823
அ.மு.மு. முருகப்ப செட்டியார்	23-1-1902	1-11-1965
ஏவி. மெய்யப்ப செட்டியார்	28-7-1907	12-8-1979
கம்பன் அடிப்பொடி சா. கணேசன்	6-6-1908	28-7-1982
சின்ன அண்ணாமலை	18-6-1920	18-6-1980
கவியரசு கண்ணதாசன்	24-6-1926	17-10-1981
டாக்டர் வ. சுப. மாணிக்கனார்	17-4-1917	24-4-1989
தமிழ்வாணன்	22-5-1926	10-11-1977
குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா	7-11-1922	16-3-1989
ஏ.கே. செட்டியார்	3-11-1911	10-9-1983
சோமலெ (நெற்குப்பை)	11-2-1921	4-11-1986
வை. சு. சண்முகம் செட்டியார்	19-9-1894	19-6-1962
ரோஜா முத்தையா	16-6-1926	4-6-1992
திவான் பகதூர் பெத்தாச்சி செட்டியார்	1886	30-3-1924
வித்துவான் காசிவிஸ்வநாதன் செட்டியார்	15-9-1898	14-11-1986
தீ. நா. முத்தையாச் செட்டியார்	27-7-1883	5-9-1936

தமிழில் மிகப் பெரிய நூலகம்

திருமதி. கலா சொக்கலிங்கம் B.Sc., BLIS (MLIS),
நூலகர், M.W.A. MATRICULATION HR. SEC. SCHOOL,
GOPALAPURAM, MADRAS - 600 086.

* சென்னை, லிங்கி செட்டித் தெரு 105 எண்ணுள்ள கட்டிடத்தில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆதரவில், அப்போதைய சென்னை மாநில ஆளுநர் விஷ்ணுராம் மேதி அவர்கள் தலைமையில், அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த திரு.எம். பக்தவச்சலம் அவர்களால் 24.8.1958-இல் திறந்து வைக்கப்பெற்றது.

* இந்த நூல் நிலையத்தை அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த காமராஜர் அவர்கள் திறந்து வைப்பதாக ஒப்புக்கொண்டார். ஆனால், குடியரசுத் தலைவர் வந்தமையால், அவருடன் வெளியூர் பயணம் செல்ல வேண்டியதிருந்ததால், திரு. பக்தவச்சலத்தைக் கொண்டு நூலகத்தைத் திறப்பிக்கச் செய்யும்படி சொன்னாராம்.

* நூலக நுண் கலையில் உலகப் புகழ் பெற்ற பெரும் பேராசிரியர், பத்மஸ்ரீ டாக்டர். எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் மேற்படி விழாவில் சிறப்புரை நிகழ்த்தினார்.

* மறைமலை அடிகள் தமது ஆராய்ச்சிக்கெனத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கி வைத்திருந்தார்.

* 15.9.1950-இல் அடிகளார் இறைவனடி சேர்வதற்குச் சில நாட்களுக்கு முன் (உயில்) விருப்ப ஆவணம் எழுதியதில் தமது நூல் நிலையத்தை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் ஒப்புவித்து, தமது பெயரால், பொதுமக்களுக்குச் சென்னையிலேயே தகுந்த இடத்தில் நூலகம் அமைத்து இலவசமாக நடத்தும்படி குறிப்பிட்டிருந்தார்.

* இப்போது சிறப்பாக அமைந்துள்ள இந்த நூல்நிலையக் கட்டிடம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்காக வாங்கப்பெற்றது.

* ஆயினும் அடிகளாரின் கருத்துப்படி, சிறந்த இடத்தில் அமைந்துள்ள இக் கட்டிடத்தில் நூல் நிலையம் திறக்கப் பெற்றிருப்பது அனைவரும் போற்றி மகிழ்வதற்கு உரியது.

* அடிகளார் சேகரித்து வைத்திருந்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களோடு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொகுத்து வைத்திருந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் இங்கே உள்ளன. இப்போது மேலும் பல ஆயிரம் நூல்கள் சேர்ந்துள்ளன.

* மொழி, வரலாறு, தத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்களுக்கு வேண்டிய அரிய நூல்கள் அனைத்தும் இங்கே இடம் பெற்றுள்ளன.

* ஆராய்ச்சி செய்ய வருகிறவர்களுக்கு இங்கே வசதிகள் செய்து தருகின்றனர்.

* இங்கே எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் பலரும் நாள்தோறும் வந்து செல்வதைக் காண முடிகிறது.

* மற்றும் நூலகத்தின் அடித்தளத்தில் சாதாரண வாசகர்களுக்காக ஒரு நூலகப் பகுதி உள்ளது. வைப்புத் தொகை (DEPOSIT) செலுத்தி, நூல்களை எடுத்துச் செல்லலாம்.

* குறிப்பாக இத்தகைய சிறப்பான நூலகம் தமிழகத்தில் வேறு எங்குமே கிடையாது என்று பலரும் கூறுகின்றனர்.

* நூலகக் கட்டிடம் பல லட்ச ரூபாய் மதிப்புடையது.

* இப்போது மேற்படி நூலகம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நிர்வாக இயக்குநரும் - ஆட்சியாளருமான இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ. அவர்களின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

வெண்பாவில் பூம்புகார் வேலப்பன்

பாவாக்கம்: பலவான்குடிப் புலவர் வேலப்பன் , பி.ஓ.எல்., பி.லிட்., பி.டி, எம்.ஏ (தமிழ்).,
எம்.ஏ. (ஆங்கிலம்)., ரா.பா (இந்தி) .தலைமை ஆசிரியர்,
அரசுப் பள்ளி , S.R. பட்டணம் – 623 306. ப.மு. (மா.வ)

காப்பு

வெண்பாவில் பூம்புகார் வேலப்பன் பாடுவது
ஒண்பாவாய் ஆகி உயர்ந்துவரக் - கண்பாவி
ஆதி விநாயகரே! அன்பான கற்பகமே!
நீதியுடன் காப்பீர் நிறைந்து.

தாம்புகார் செய்யாத் தனவணிகர் தாம்வாழ்ந்த
'பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்'
மூர்த்திதலம் தீர்த்தமென்ற மூன்றுக்கும் சான்றாகிச்
சீர்த்தியுடன் வாழ்வோம் சிறந்து. 1

பூவிரிக்கும் காவிரித்தாய் புன்னகையால் தாம்மகிழ்ந்து
பாவிரிக்கும் வேலப்பன் பைந்தமிழால் - நாவிரிக்கப்
பல்லவன நாதரவர் தோள்தழுவும் சௌந்தர்யாள்
நல்லவரம் ஈவாள் நயந்து. 2

அதிகார நந்தீஸ்வர் முன்னம் வணங்கி
மதியாரக் காரியம்செய் சூரியநல் ஈஸ்வரரும்
சுந்தர ஈஸ்வரரும் தூஅகஸ்த்தி ஈஸ்வரரும்
எந்தநாளும் காக்க இனிது. 3

பில்லாரண் ஈஸ்வரரும் பெம்மான் அருள்பெற்ற
நல்ல நகரத்தார் வம்சவழிப் பட்டினத்தார்
சொல்லும் பொருளுமாய்த் தெட்சிணா மூர்த்தியருள்
வெல்லுமாறு வாழ்வோம் விழைந்து. 4

அன்பால் அருள்மிகுவி நாயகர்லிங் கோத்பவர்
இன்பமகா லெட்சுமி எந்தமிழ்நற் சுப்ரமண்யர்
நற்பிர்மா துர்க்கையம்மன் தாமிரண்டாய்ச் சண்டிகேஸ்வர்
அற்புதமாய்க் காப்பார் அமைந்து. 5

கேள்வி அறிவுடையார் கேண்மைவேத ஆகமத்தால்
வேள்வியாக சாலைஇரு வைரவர் மண்டபத்துள்
தோன்று நவக்கிரஹம் தூய துணையாகி
ஊன்றுநலம் சேர்க்கும் உயர்ந்து. 6

மீனாட்சி கல்யாணம் மேவத் துணையான
தேனாட்சி மாமுனிவர் செந்தமிழ்அ கத்தியனார்
நற்றமிழ் வல்லதிரு ஞானசம் பந்தரும்
முற்ற அருள்வார் முனைந்து. 7

சுந்தரர் சொன்மாலை தாளமுடன் சூடுகின்றார்
சந்திரனும் தண்கதிரால் தான்இனிச னீஸ்வரரும்
பாலமுதம் கொள்பால சுப்ரமண்ய சாமியருள்
ஞாலமதில் காக்கும் நமை. 8

பண்ணான தக்கேசிப் பண்புடைய ராகத்தில்
கண்ணான சம்பந்தர் தேவாரம் பாடியதைப்
பல்லவன ஈஸ்வரனார் சௌந்தர நாயகியாள்
நல்லமுதாய் உண்டார் நயந்து. 9

'அடையாஅர் தம்புரங்கண் மூன்றும்' என் றிங்கு
தொடையாய்த் தொடங்கும்அப் பாவுடன் ஈரடிப்பண்
'பஞ்சரம்ப ழம்பரசு பாணியர்' பாடலும்
நெஞ்சறம் நல்கும் நிறைந்து. 10

கேது குருசனிபு தன்சூரி யன்செவ்வாய்
தீதுஅறியா ராகுநற் சந்திரன் சுக்கிரனும்
ஒன்பதுகோள் ஆகி உயர்ந்து நமை என்றும்
மன்பதையில் காக்க மகிழ்ந்து. 11

'வானமாள்வ தற்கூனம் ஒன்றில்லை' பல்லவனத்
தேனமர் நாதர் சவுந்தர நாயகியாள்
ஞானப்பால் உண்டதிரு ஞானநற் சம்பந்தர்
மோனப்பால் ஊட்டும் பசு. 12

'பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவ னீச்சரத்துள்'
அத்தனைப் பூஜித்தார் கால மகரிஷியார்
சித்தம் தெளிந்தார் சிவமயமாய்த் தாமானார்
உத்தமப் பட்டினத்தார் போன்று. 13

தில்லைநட ராசர் சபாபதி யாகிஇங்கு
எல்லை சிவகாமி மாணிக்க வாசகரும்
தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுக் கின்றார் அமர்ந்து. 14

அமர்நீதி நாயனார் காரைக்கால் அம்மை
நமர்கலிக் கம்பருடன் நற்கீர்த்தி மூர்த்தி
சமர்உலகம் வென்ற இயற்பகைநா யன்மார்
அமர்உலகம் ஆள்கின்றார் பார். 15

ஈக்களெலாம் சேர்ந்தினிய தேன்கூடு தான்கட்டும்
பாக்களெலாம் சேர்ந்து பனுவலாகும் அஃதேபோல்
எல்லாரும் சேர்ந்தே எழில்விழாவைச் செய்கின்றார்
நல்லவரே வாழ்க நயந்து. 16

துவாரவி நாயகர்து வாரஸ்கந் தர்நல்
துவாரஇரு பாலகர் முன்னம் வழிவிடவே
அன்னார் வழிபட்டு ஆண்டவனை வேண்டினால்
பொன்னார் நலம்தருவார் போற்று. 17

நாட்டுநம் கோட்டை நகரத்தார் செட்டிநாடு
விட்டைவிட்டுப் பூம்புகார் வந்துமிக அற்புதமாய்ச்
செய்யும் திருவிழா பட்டினத்தார்க் கெண்திசையும்
பெய்யும் மழைஎன்று பேசு. 18

பல்லவன நாதர் திருக்கோயில் உள்ளேதான்
நல்ல படியாக உற்சவ மூர்த்திகளாய்ப்
பட்டினத்தார் வாழ்விலே பங்குபெற்றார் எல்லாரும்
ஒட்டிஉறை கின்றார் உயர்ந்து. 19

சீரார் சிவசருமர் செம்மைச் சுசீலையார்
நீரார் மருதவாணர் ஞான கலாம்பிகை
ஊரார் புகழும் உயர்ந்த சிவகலையார்
பாரோர் வணங்குவதைப் பார். 20

பத்ர கிரியார்க்கும் நாயடியார் சேந்தனார்க்கும்
சித்ர மனைவி குழந்தைமுதல் யாவர்க்கும்
நம்ரிஷப ஆரூடர் நாடும் பவானிக்கும்
தம்அருள் செய்கின்றார் தாம். 21

ஓங்கும் பிரதோஷ நாயகனார் நற்சிலையும்
தாங்கும் உயர்நந்தி ஈஸ்வரனார் பொற்சிலையும்
சங்கம தீர்த்தமும் ஜானவி தீர்த்தமும்
மங்கலம் நல்கும் மகிழ்ந்து. 22

திருக்குளத்து நாயகரை வேண்டி வழிபட்டுப்
பெருக்கெடுக்கும் காவிரிபோல் பட்டினத்துப் பெம்மான்
மருக்கொழுந்தின் நல்ல மணம்போல் மனம்சால்
குருக்கள் அருளே பொருள். 23

பஞ்சமூர்த்தி நம்மருத வாணர் சிவகலைக்கும்
பஞ்சாட் சரம்சொல்லிப் பல்லவன நாதரவர்
நெஞ்சம் கவர்ந்த நிறையன்புப் பட்டினத்தார்
கஞ்சமலர்ச் சேவடிகள் காப்பு. 24

மேற்சொன்ன யாவர்க்கும் ருத்ராபி ஷேகமுடி
ஏற்ப இனியவிடை யாற்றியும் நம்மின்
நகரத்தார் செய்து நலம்பெற்றார் வாழ்க!
மகரத்தார் வேந்தராய்ம கிழ்ந்து. 25

கொப்புடையாள் செல்லாயி கோடியருள் கூடிவர
ஒப்பரிய நற்பணிகள் ஓய்வின்றிச் செய்துவரும்
கண்டனூர் காரைக் குடிஅருணா சலனார்
தொண்டருடன் வாழ்க தொடர்ந்து. 26

அன்னார் நமது நகரத்தார் நன்கொடையால்
பொன்னார் திருப்பணிகள் போற்றிமிகச் செய்கின்றார்
இந்தத் திருவிழா போல் எந்தஊரில் உண்டாம்சொல்
எந்தநாளும் காப்போம் இதை. 27

நல்ல மொழிநாடு தெய்வ இனப்பற்றும்
வல்லவராய்க் கொள்வோம் வளர்ந்து கிளர்ந்துவரும்
பூம்புகார் போற்றியநம் கண்ணகியாள் கற்பினைப்போல்
நாம்பெருமை காப்போம் நயந்து. 28

கண்டனூர்ச்ச மையல் அழகப்ப மேஸ்திரியும்
தொண்டாற்றி நால்வகை ஆறுசுவை நல்லமுதைச்
செய்தார் உயர்வள்ளல் சீனி அழகப்பர்
கொய்தார் புகழ்மலர்கள் கூர்ந்து. 29

ஆங்காங்(கு) இருக்கின்ற நம்இனத்தார் நன்மனத்தால்
பாங்காய்ப் பெரும்பொருளும் பண்பால் அருந்தொண்டும்
நீங்காது செய்வதனால் நெஞ்சார்ந்த நன்றியினை
ஓங்கிமிகச் சொன்னேன் உவந்து. 30

பொறுப்பாய்ப் பழமலையார் ஆவுடைநல் அப்பர்
விருப்பாய்ப் பணிசெய் சிதம்பரம் சொக்கலிங்கம்
என்று பலபேர்கள் எவ்வளவோ நன்மைசெய
நன்றியுடன்போற்றுகிறேன் நான். 31

நகர விடுதி நலமுரைக்கப் போமோ?
சிகரமாய் எல்லா வசதிகளும் உண்டாம்நம்
ஆச்சிமார் அப்பச்சி பிள்ளைகள் யாவர்க்கும்
மாட்சிமிக உண்டாம் மகிழ்ந்து. 32

இத்தகைய நம்விடுதி ஏற்படஉ ழைத்தவர்கள்
உத்தமர்கள் அன்றோ உயர்குடும்பம் வாழியவே
கண்டனூர்கோ ணாபட(டு) அமரா வதிபுதூர்
தண்டமிழ் ஊர்கள் அவை. 33

காசிவிஸ்வ நாதர் விசாலாட்சி ஆச்சியும்
மாசிலாவை நாகரய்யா நாகப்ப ரோடும்நல்
வேங்கடாச லம்கருப்பன் செட்டிராம நாதனவர்
பாங்காய் விடுதிகண்டார் பண்டு. 34

பஞ்சமூர்த்தி கட்கும் அபிஷேகம் தூபதீபம்
அஞ்சுகமாய் மேளதாள இன்னிசைக் கச்சேரியும்
கொஞ்சும் கிளியாய் இயற்றமிழ்நா தஸ்வரமும்
விஞ்சுமயில் நாடகமே தாம். 35

காட்சிக் கினிய திருவிழாக் கூட்டமும்
மாட்சிக் கினிய புலவர் தமிழ்ஊட்டும்
ஆட்சிக் கினிய பட்டினத்தார் நற்கதையும்
சாட்சிக் கினியதெனச் சாற்று. 36

கூட்டு வழிபாடும் பட்டினத்தார் கொள்கைப்பால்
ஊட்டும் உயர்பண்பும் ஓங்கும் இமயத்தின்
கங்கையென ஜீவநிலை காலமெலாம் தான்பெற்று
மங்கலமாய் வாழ்வோம் மகிழ்ந்து. 37

சாயா வனம்கண்டு சாயா மனம்கொண்டார்
மாயா உலகை மதிக்கத் தெரிந்தவர்கள்
காயாய் உளதைக் கனியாய் இனிதாக்கித்
தாயாய் எழுந்தருள்வார் தாம். 38

தாமின் புறுவ(து) உலகின் புறக்கண்டு
சேமப் பெருங்குணத்தால் செல்வம் பிறர்க்கீந்து
காமக் கடல்கடந்த பட்டினத்தார் பாட்டுவழி
நாமமெனக் கொண்டார் நயந்து. 39

நாகைநல் மாவட்டம் சீர்காழி வட்டத்தில்
ஈகையால் பேர்சால்நம் பட்டினத்துப் பிள்ளையார்க்குக்
காவிரிப்பூம் பட்டினத்தில் அற்புதமாய்க் கொண்டாடும்
பூவிரிவி ழாதிருவைப் போற்று. 40

கண்டனூர் அன்பர் இராமையாச் செட்டியார்
தொண்டரின் மேலான தொண்டராய் ஐம்பதாண்டு
பூம்புகார் வந்து திருவிழா செய்ததிறம்
நாம்நினைவு கூர்வோம் நயந்து. 41

திருக்கோயில் பூசை தினந்தோறும் செய்வார்
திருக்கோயில் நைவேத்தியம் சிங்கா ரலங்காரம்
சுற்றுப் புறத்தூய்மை எனப்பலவாய்த் தொண்டுசெய்வர்
எற்றைக்கும் வாழ்க இனிது. 42

வில்லாண்ட நெல்லாண்ட சொல்லாண்ட மூவேந்தர்
கல்வியுடன் செல்வமுடன் வீரமுடன் வாழ்வாங்கு
எண்ணிரண்டு பேறுகளால் இன்புற்று வேலப்பன்
கண்ணிரண்டாய் வாழ்க கலந்து. 43

வாழ்த்து

வாழ்கநம் பூரதமாம் பாரதமா நாடுதமிழ்
வாழ்கநம் எண்திசையும்போற்றுசெட்டி நாடுதினம்
வாழ்கநம் பூம்புகார் காவிரியும் வாழ்கவே
வாழ்க உலகம் வளர்ந்து. 44

வாழ்க நகரத்தார் வணங்குகின்ற பட்டினத்தார்
வாழ்க அறம்பொருள் இன்பநல் வீடுபெற்று
வாழ்க திருவருளால் வாழ்க குருவருளால்
வாழ்கவே வேலப்பன் வாழ்த்து. 45

உலகெலாம் வாழ்க!

பட்டினத்தார்

